
திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

ஜனவரி 2021

விலை ரூ.5/-



"ஸ்ரீவேங்கடேச சரணௌ சரணம் ப்ரபத்யே"





திருமலையில் 30-12-2020 அன்று வைபவமாக நடைபெற்ற திருமலையப்ப ஸ்வாமி பிரணய கலகமஹோத்ஸவத் திருக்காட்சிகள்



திருமலையில் 25-12-2020 வைகுண்ட ஏகாதசி
அன்று நடைபெற்ற தங்கத்திருத்தேர்



திருமலையில் 26-12-2020 வைகுண்ட துவாதசி
அன்று ஆகமப்படி நடைபெற்ற சக்கர ஸ்நானம்




30-12-2020 அன்று திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமிக்கு தங்க ஆபரணங்களை ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள் திருப்பதி இணைச்செயலாட்சித்தலைவர் திரு. பி. பசந்த் குமார் ஐ.ஏ.எஸ். அவர்களிடம் வழங்கும் காட்சி



29-12-2020 அன்று தில்லியில் உள்ள திருவேங்கடமுடையான் ஆலயத்திற்கு "கோயிலுக்கு ஒரு கோமாதா" திட்டத்தின் கீழ் பசுவோடு கன்றினை வழங்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் மற்றும் செயலாட்சித்தலைவர்



த்$_3$ருபதே$_3$ா த்$_3$ரெளபதே$_3$யாச்ச
ஸர்வச: ப்ருதி$_2$ வீபதே |
ஸௌப$_4$த்$_3$ரச்ச மஹாப$_3$ாஹு:
சங்க$_2$ாந்த$_3$த்$_4$மு: ப்ருத$_2$க்ப்ருத$_2$க் ||

அரசனே! ஸாத்யகியும், துருபத ராஜனும்,
திரௌபதியின் ஐந்து புதல்வர்களும், நீண்ட
புஜங்களுடைய சுபத்திரையின் குமாரன்
அபிமன்யுவும் இவர்கள் எல்லோரும்
எல்லாப் பக்கங்களிலிருந்தும்
தனித்தனியாகச் சங்குகளை
முழக்கினார்கள்

– ஸ்ரீமத் பகவத் கீதை 1–18





தைம்மகத்தில் வருமழிசைப் பரனே மற்றைச்
சமயங்கள் பலதெரிந்து மாயோ னல்லாற்
தெய்வம்மற் றில்லையென வுரைத்த வேதச்
செழும்பொருணான் முகன்றொண்ணூற் றாறு பாட்டு
மெய்ம்மிகுத்த திருச்சந்த விருத்தப் பாடல்
விளங்கியநூற் றிருபதுந்தப் பாமல் மெய்யே
வையகத்து மறவாம லுரைத்து வாழும்
வகையடியே னுக்கருள்செய் மகிழ்ந்து நீயே

தைமாதத்து மகத்திருநக்ஷத்திரத்தில் அவதரித்த
திருமழிசையாழ்வாரே! மற்றைப் பல மதங்களையும் நன்கு
அறிந்து, அதிசயச் செய்கையையுடைய ஸர்வேசுவரனை
யன்றி உபாசிக்கத்தக்க தெய்வம் வேறு இல்லை என்று
வெளியிட்ட, வேதத்தின் சிறந்த சாரார்த்தமாகிய நான்முகன்
திருவந்தாதியாகிய தொண்ணூற்றாறு பாசுரங்களையும்,
தத்துவார்த்தங்கள் நிறைந்த திருச்சந்தவிருத்தப்
பாட்டுக்களாக பிரகாசிக்கின்ற நூற்றிருபது பாசுரங்களை
யும், தவறாமல் உள்ளவாறே, உலகத்தில் மறவாது,
அநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும் வண்ணம் நீ மகிழ்ச்சி கொண்டு
தாஸனாகிய எனக்கு அருள்புரிவாயாக.

- பிரபந்தசாரம்-371



## திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# “ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை”

*“மானிட சேவையே மாதவன் சேவை” எனும் பெரும் நோக்கத்துடன் தி.தி.தேவஸ்தானம் பல்வேறு சமூக நலச் செயல்களை நிர்வகிக்கின்றது. இதில் ஒரு பகுதியாக ஆதரவற்ற சிறார்களுக்கு உதவிக்கரம் நீட்டும் நோக்கத்துடன் 1943–ஆம் ஆண்டு ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் (திருப்பதி) அறக்கட்டளையை தி.தி.தே. நிறுவியது. இந்த ஸ்ரீவேங்கடேஸ்வரா பால மந்திரம் அறக்கட்டளையோடு ஸ்ரீவேங்கடேஸ்வரா ஜலநிதி திட்டம், கல்யாண மஸ்து திட்டம், ஸ்ரீவேங்கடேஸ்வரா தகவல் தொழில் நுட்ப அறக்கட்டளை போன்றவற்றை இணைத்து “ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை” யாக வடிவமைக்கப்பட்டுள்ளது.*

**திட்டத்தின் நோக்கங்கள் :**

1) ஆதரவற்ற சிறார்கள், முதியோர், ஆதரவற்றோர் பாக்கியமற்றோர், ஏழ்மையில் வாடும் தாழ்த்தப் பட்ட வகுப்பினர் போன்றோரின் வளர்ச்சி, பாதுகாப்பு நலனுக்காக தர்மசாலைகள், தங்கும் வசதி, இல்லங்கள் ஏற்படுத்துதல். பொருளாதாரத் தில் பின் தங்கிய மாணவ மாணவியர்க்கு பண உதவி அளித்தல்.

2) மாற்றுத் திறனாளிகளுக்கும், மனவளம் குன்றிய நோயாளிகளுக்கும் தகுந்த மருத்துவ உதவிகள் உண்டு பண்ணி அவர்களின் வாழ்வினை மேம் படுத்துவது, குலம், மதம், ஜாதி, வர்க்கம், வர் ணம் போன்ற வேறுபாடுகள் கடைப்பிடிக்காமல் அனைவரையும் சமமாகப் பார்ப்பது.

3) வெள்ளம், வறட்சி போன்ற இயற்கைச் சீற்றங் களின் போதும், தீப்பிடித்தல் போன்ற எதிர்பாராத சம்பவங்கள் நிகழும்போதும் விரைவான உதவி களை மேற்கொள்ளுதல்.

4) காது கேளாத, வாய் பேசாத குழந்தைகளுக்கும் மேற்படி குறைபாடுகளோடு பிறக்கும் சிசுக்களுக் கும் மறுவாழ்வு மையங்களை ஏற்பாடு செய்தல்.

5) மேற்குறிப்பிட்ட குறைபாடுகளோடு கிராமங்களில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்குத் தேவையான கருவிகளை அளித்தலோடு, அவர்களுக்குக் கல்வி போதித்தல்.

6) மக்களுக்கு மிகவும் தேவையான குடிநீர் வச தியை ஏற்படுத்தித்தருதல், திருமலை பஞ்சா யத்து, திருப்பதி மாநகராட்சிக்குத் தேவையான நீர் வள ஏற்பாட்டிற்காக தடுப்பணைகளை ஏற்பாடு செய்வது, நீர் சேகரிப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

7) புத்தகங்களுடன் இணைய தளம் முதலான அதி நவீன தொழில் நுட்ப உதவிகளோடு நம் நாட்டு வரலாறு மற்றும் பண்பாட்டு கலாச்சார பாரம் பரியத்தை அடுத்தத் தலைமுறைக்கு அளிப்பது.

8) சமுதாய ஒழுக்கம், அற நெறிமுறைகளை வளர்த்து இளைஞர்களிடையே ஆன்ம நேய நம்பிக்கையை உண்டு பண்ணுதல்.

9) உதவிகரமான திருமண நிகழ்வுகள் மூலம் மண மக்களை கௌரவ அபிமானத்துடன், உயர் குடும்ப வாழ்க்கையை வாழும்படி செய்தல்.

10) மேற்குறிப்பிட்ட நோக்கங்களுக்கு ஊக்கமளித்திட தனி நபர்களுக்கும், நிறுவனங்களுக்கும் உதவி அளிப்பது.

11) மேலே விவரித்த இலட்சிய சாதனங்களில் இலா பம் ஈட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் பார்ப்பது.

**ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை நன்கொடையாளர்களுக்கு :**

1) இத்திட்டத்திற்கு குறைந்தபட்ச நன்கொடை ரூ.1,000/-

2) ரூ.1,000/-க்கு குறைவாக நன்கொடையளித்தால் எவ்விதத் தகவலும் இன்றி ஸ்ரீவாரி உண்டிக்கணக்கில் செலுத்தப் படும். பெறப்படும் நன்கொடைகளை தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் இருப்பு வைத்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியை இத்திட்டத்திற்கு உபயோகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்கான நன்கொடையை வழங்குபவர்கள் – “செயலாட்சித் தலைவர், ஸ்ரீவேங்கடேஸ்வரா சர்வஸ்ரேயஸ்சு அறக்கட்டளை, தி.தி.தேவஸ்தானம், திருப்பதி” எனும் பெயரில் காசோலை / வங்கி கேட்பு வரைவோலையை “பிரதான கணக்காளர், தி.தி.தேவஸ்தானம், திருப்பதி - 517 507” எனும் முகவரிக்கு அனுப்பவும்.



வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்

# ஸப்தகிரி


சமய மாத இதழ்

மலர் 51
இதழ் 08

ஜனவரி 2021



சிறப்பு ஆசிரியர் :
Dr. K.S. ஜவஹர் ரெட்டி, ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
பேராசிரியர் K. ராஜகோபாலன், பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. பி.ராமராஜு, எம்.ஏ.,
சிறப்பு அலுவலர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்),
தி.தி.தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360


நீங்கள் ஸப்தகிரி இதழை **www.tirumala.org**யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர் -பிரதான ஆசிரியர்


## உள்ளுறை


பக்கம்

**தைப்பொங்கல்** - *இதிஹாசமயம் வீ. சீதாராமன், சென்னை.* 7
**இன்னும் என்ன உறக்கம்?...** 11
- *அம்பிகை பாகன் வி.பி. அர்த்தநாரி, கோவை.*
**மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்** 15
- *ஸ்ரீ. உ.வே.அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, திருவரங்கம்.*
**நாமக்கல் அருமை ஆஞ்சநேயர் பெருமை** 18
- *திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.*
**பாகவதர்களின் பெருமையை உணர்த்திய தொண்டரடிப்பொடியாழ்வார்** 22
- *திரு. எஸ். சுதர்ஸனம், நங்கைநல்லூர்.*
**தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்** 25
- *திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*
**திருமழிசையாழ்வார் போற்றும் திருவேங்கடம்** 31
- *திரு. மீ. சீனிவாசன், பரமகுடி.*
**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் :**
**ஆண்டாள் பெற்றது போல நல்ல கணவனைப் பெறவேண்டும்** 33
- *பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.*
**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும்** 36
**உரையும்** -*உ.வே.டாக்டர்.மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*
**108 திவ்யதேச வைபவம் : திருக்குருகூர்** 38
- *உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*
**கவிதை : பொங்கலோ பொங்கல்!** 44
- *முனைவர் ச.செந்திலாண்டவன், சென்னை.*
**கந்தர் மலை முருகன்** - *திரு. அறந்தாங்கி சங்கர், சென்னை.* 47
**ஆயுர்வேதம் : திரிகடுகம்** - *திருமதி வி. உஷா, திருப்பதி.* 49
**நீதிக்கதைகள் : தீர விசாரித்தறிவதே மெய்** 51
- *திரு. சத்யதாரா, சென்னை.*
**சித்திரக்கதை : ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாணம்** 52
- *திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.*
**புதிர் : வினா-விடை** 54
- *திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்.*


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : **திருவேங்கடவன் (மூலவர், திருமலை)**
பின்னட்டை : **ஸ்ரீபத்மாவதி தாயார் (மூலவர், திருச்சானூர்)**



உங்களுடன்...

# கோமாதா எங்கள் குலமாதா

மனித வாழ்வுக்கு உணவு, உடை, இருப்பிடம் இம்மூன்றும் அடிப்படை தேவைகள். இம்மூன்றினையும் பெறுவதற்கு விளைநிலங்கள், கால்நடைகள், நீர், நிலம், காற்று, ஆதவனின் ஒளி, ஆகாயம் போன்ற காரணிகள் இன்றியமையாதவைகளாகும். இந்த சக்திகளை வழங்கும் பஞ்ச பூதங்களுக்கும், இவைகள் அனைத்தையும் படைத்து, காத்து, வாழ வைக்கும் இறைவனுக்கும் நாம் நன்றி செலுத்தும் விதமாக உருவான கோலாகலமான கொண்டாட்டங்களே பண்டிகைகளாகத் திகழ்கின்றன.

இப்பண்டிகைகளிலேயே தமிழர்கள், உத்தராயணத் துவக்கத்தில் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையே மிகச் சிறப்பானதாகும். தமிழர்கள் தம்மை வாழ வைக்கும் இயற்கைக்கே விழா எடுக்கின்றனர். உழவுத்தொழிலை செய்யும் விவசாயிகளுக்கு மழை மிகவும் அவசியமாகும். அதற்கடுத்து சூரியனின் தயையும் இன்றியமையாததாகும். பசுமாடுகளின் தயவும் இன்றியமையாததே. எனவே தான் முதல் நாள் போகிப் பண்டிகையும், இரண்டாம் நாள் பொங்கல் பண்டிகையும், மூன்றாம் நாள் மாட்டுப்பொங்கலையும் கொண்டாடுகின்றனர்.

மார்கழி மாதத்தின் கடைசி நாளையே போகியாகக் கொண்டாடுகிறோம். இதனை இந்திர விழா என்றும் கூறுவர். இந்திரன் மழைக்கடவுள் என்பதால் இந்தக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. மழைக் காலம் மார்கழி மாதத்தோடு முடிவடைகிறது. எனவேதான் விவசாயத்திற்கு தண்ணீர் கொடுத்து உதவிய மழைக்கு நன்றி செலுத்தும் விதமாக இவ்விழா கொண்டாடப்படுகிறது எனலாம்.

இரண்டாம் நாளான தைத்திங்கள் முதல் நாள் பொங்கல் திருநாளாகும். இதனை “சூரிய வழிபாட்டு நாள்” என்றும் கூறுவர். அதுமட்டுமின்றி சூரியன் தனுர் ராசியிலிருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் காலமாதலால் மகர சங்கராந்தி எனப்படும். சூரியன் உழவுக்கு ஒளி கொடுத்து நம்மை வாழவைப்பதால் புது விளைச்சலை அவருக்குப் படைத்து வழிபடுகிறோம்.

பொங்கலுக்கு மறுநாள் உழவுத் தொழிலுக்கு உதவிய மாடுகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப் பொங்கலை கொண்டாடுகிறோம். பண்டைய காலங்களிலிருந்தே கால்நடைகள் நம் செல்வங்களாக இருந்து வருகின்றன. இது குறித்தே ஆண்டாளும் “நற்செல்வன் தங்காய்” எனக் குறிப்பிடுகிறாள். தாயிற்கு அடுத்து தாயாக நமக்கு பயன்படுகின்ற பசுவை தெய்வமாகவே வழிபட்டு வருகின்றோம். மனித குலத்திற்கே பசு ஒரு வரப் பிரசாதமாகும். எங்கெல்லாம் பசு பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் சுபிட்சம் உண்டாகும். பசுவின் திருமேனியில் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு தேவதை வசிப்பதாக புராணங்களும் கூறுகின்றன.

பவிஷ்யோத்ர புராணத்தில் (அத்தியாயம் 156,16.20) ஸ்ரீகிருஷ்ண பகவான் பசுக்களை தானம் செய்வதன் முக்யத்துவத்தைப் பற்றி கூறுகின்றார். மேலும், பசுக்கள் அனைத்து தெய்வங்களின் உறைவிடம் மற்றும் தூய்மையின் உருவம் என்கிறார். எனவே தான் பசுக்களை வணங்குவது மிகவும் முக்கியமானதாகும். அதிகாலையில் பசுவை காண்பதும், பூஜிப்பதும் நன்மையளிக்கும். பசுவை தொடுவது தீர்த்தத்தை சேவிப்பதற்கு சமமாகும். பசுக்களை தானம் செய்வது என்பது தர்மத்தின் மிக உயர்ந்த செயலாகவே கருதப்படுகிறது.

திருமலை திருப்பதி தேவஸ்தானமும் கோசம்ரக்ஷணை அறக்கட்டளையை நிறுவி பக்தர்களையும் இதில் பங்கேற்பதற்கு வாய்ப்பினை வழங்கியுள்ளது. திருமலை, திருப்பதி, சித்தூர் அருகே பலமனேருவிலும், கோசாலையை நிறுவி பசுக்களைப் பாதுகாத்து பராமரித்து வருகின்றது. இதுமட்டுமின்றி நாடு முழுவதிலும் பசுக்களை பராமரிக்க “கோயிலுக்கொரு கோமாதா” திட்டத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக முதல் பசுவினை விஜயவாடாவில் உள்ள கனகதுர்கா அம்மன் ஆலயத்திற்கு வழங்கப்பட்டது. எந்த ஒரு பக்தரும் இத்திட்டத்தின் கீழ் பசுக்களை நன்கொடையாக வழங்கலாம். பின்னர், நன்கொடையாகப் பெறப்பட்ட பசுக்கள் பல்வேறு கோயில்களுக்கும் வழங்கப்படும். தி.தி.தே.வின் இந்த உன்னத திட்டம் நாட்டின் அமைதி, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றிற்காகவும் மற்ற ஆலயங்களிலும் இந்த கோமாதா வழிபாட்டை ஊக்குவிப்பதற்கே ஆகும்.

கோதானம் செய்வோம்... கோடி நலம் பெறுவோம்.

பொங்கு என்ற சொல், பொங்குதல், மிகுதல், செழித்தல் என்றவாறு பொருள் கொள்ளப்படும். நமது சூரிய மண்டலத்தில் உள்ள கோள்களின் இயக்கங் களில், நாம் பூமியில் இருந்து நோக்கும்போது, ஜ்யோதிஷ சாஸ்திரத்தின் விதிப்படி, சூரியன், பவனி வரும் பாதையில், தனுர் ராசியில் இருந்து, "மகர ராசிக்கு" பிரவேசம் செய்யும் நாளே, பாரதத்தின் பல பாகங்களில், மகர சங்கராந்தி என்றும், தமிழ்நாட்டில் தைப்பொங்கல் என்றும் பெருமை கொண்ட விழாவாக உருப்பெறுகிறது. (சமஸ்க்ருத மொழியில் ஸங்க்ரமண என்றால் நகரத்துவங்குதல் – சூரியன் வடக்கு நோக்கி தனது பயணத்தை திருப்புகின்ற நாளே – உத்தராய ணத்தின் துவக்கமே – தைப்பொங்கல் என்று அறிந்து கொள்ளலாம்).

பொங்கல் விழா என்பது நான்கு நாட்களுக்கு மக்களை மகத்தான மகிழ்ச்சியில் மிதக்க வைக்கும் கொண்டாட்டமாக உருக்கொள்கிறது. நான்கு நாட்கள் எவ்வாறு?

ஆடி முதல் துவங்கும் ஆறு மாத தக்ஷிணாயணம், மார்கழி இறுதி நாளன்று முடிவடைகிறது. அன்றே, முதல் நாள் கொண்டாட்டங்கள் துவங்குகிறது. அடுத்த நாள் உத்தராயணத்தின் துவக்கம். பகல் பொழுது அதிகரிக்கும் துவக்கம். அதுவே தைத்திங்கள் முதல் நாள், மங்கலம் பொங்கும் "பொங்கல் திருநாள்". இதன் பின்னணியாக, ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சங்க கால வரலாற்றிலேயே பல இலக்கியங்கள் காட்டும் ஆதாரங்கள் ஏராளம். சில புராண பின்னணி கொண் டவை. சில செவி வழிச் செய்தியாக தலைமுறைகளின் ஊடே பயணம் கொண்டவை. முதலில் ஆதாரங்களை ஆராய்வோம்! பின்பு நான்கு நாட்கள் திருவிழாக் கோலங்களில் திளைப்போம்.

"ஆடிப்பட்டம் தேடி விதை" என்பது பழமொழி. ஆடி மாதம் துவங்கி, நிலத்தினை உழுது, சீர் செய்து, விதைத்து பயிரிட்டு, உயிரினும் மேலாக பாதுகாத்து வளர்த்து, புது நெல் அறுவடை செய்ய, அப்பப்பா கிராமங்களில் தான் எவ்வளவு கடின உழைப்பு. கலப்பை கொண்டு, கால்நடைகளின் துணை கொண்டு உழுது, உரமிட்டு "உணவாக" உருக்கொள்ள செய்ய படும்பாடு. பாரதநாட்டின் முதுகெலும்பே இந்த இணைப்புகளின் உழைப்புதான்.

நான்கு நாட்கள் எவ்வாறு?


**முதல் நாள் :**

போகி பண்டிகை "மார்கழி" யின் இறுதி நாள். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற தத்துவம் கொண்டது. ஆண்டு முழுவதும் இல்லங்களில் தேங்கிய தேவையற்ற பொருட்கள், குப்பைகள் அனைத்தும் களையப்படும். வீட்டின் கூரை அல்லது நுழைவு வாயிலில், கொத்தான பூளைப்பூ செருகப்படும்.

பழையன போக்குவதால் "போக்கி" என்பது "போகி" என்று மருவியது என ஒரு சாரார் கருதுகிறார்கள். இந்திரனுக்கு "போகி" என்று ஒரு பெயர் உண்டு. சங்க காலத்தில் நல்ல மழை பெய்யவும், நாடு செழிக்கவும், அறுவடை பெருகவும் மகளிர் சில விரதங்களை கடைப்பிடிப்பார்கள். பொங்கலுக்கு முதல் நாள் இந்த

# தைப்பொங்கல்

**இதிஹாசமயம் வீ.சீதாராமன்,**
**சென்னை, 98945 26302**





விரதத்தினை முடிப்பார்கள். அப்பொழுது இந்திரனுக்கு நன்றி சொல்வார்கள். அது போன்ற ஒரு கொண்டாட்டம் இளங்கோவடிகள் அருளிய “சிலப்பதிகாரம்” என்ற காவியத்தில் “இந்திர விழா” என்று குறிக்கப்படுகிறது. ஆடு, மாடு போன்ற கால்நடைகள், உழவர்கள், ஆயர்கள் போன்ற பலருக்கும் நன்றி தெரிவிக்கும் வண்ணம் உருவாகும் விழாவாக உருப்பெறுகிறது. இந்த விழாவில் மழையை பொழிவிக்கும் இந்திரனுக்கு நன்றி தெரிவிக்கும் வண்ணம் பல கொண்டாட்டங்கள் உருப்பெற்றன.

ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம் நிகழ்ந்த காலத்தில், ஆயர் பாடியில் தேவேந்திரன் தனது சக்தியினால்தான் மழை பொழிந்து, பயிர் செழித்து, மக்கள் வாழ்வு செழிக்கிறது என்று கர்வம் கொண்டு, மிகவும் ஆணவம் கொண்டான். இந்திரனுக்கு பாடம் புகட்டும் வண்ணம், ஸ்ரீகிருஷ்ணர் தேவேந்திரனுடைய வழிபாட்டை நிறுத்தி ஆயர்பாடி மக்களை கோவர்த்தன மலையை வழிபடுமாறு செய்தாராம். சினம் கொண்ட இந்திரன் ஒரு முறை இடி மின்னலுடன் மிக மிக கடுமையான மழையினை பொழிவித்து மக்களுக்கு சோதனையையும், வேதனையையும் ஏற்படுத்தினான். அவ்வமயம் ஸ்ரீகிருஷ்ண பகவான், இந்திரனுக்கு பாடம் புகட்டும் வண்ணம், கோவர்த்தன மலையைத் தூக்கி பிடித்து, ஆயர்பாடி மக்களை அதன் கீழ் பாதுகாப்பாக இருக்க வழி செய்தார். இந்திரன் தனது தவறை உணர்ந்து, ஸ்ரீகிருஷ்ணனின் தெய்வாம்சத்தை உணர்ந்து, ஆணவத்தினை துறந்து, மன்னிப்புக் கோரி, ஸ்ரீகிருஷ்ணரின் ஆசியை பெற்றான். இந்திரன் மனம் திருந்திய நாளில், கண்ணபிரானின் அருளினால், மீண்டும் தனது மரியாதையை பெற்றான் என்றும், அந்த நாளே “போகி” என்றும், மீண்டும் இந்திரன் மீது வழிபாடுகள் தொடர்வதாகவும் ஒரு செவி வழி செய்தி நிலவுகிறது.

**இரண்டாம் நாள் :**

உத்தராயணத்தின் முதல் நாள். சிறப்பான சூரிய வழிபாடு நடைபெறும் நாள். இல்லங்கள் முழுவதும் மங்கலம் பொங்க காவியும், சுண்ணமும், வண்ணமும் கொண்டு அலங்கரிக்கப்படும். வாயிலை அலங்கரிக்கும் விதவிதமான வண்ணக் கோலங்களில், மங்கையர் குலத்தின் கை வண்ணம் காணக் காண கண்களுக்கு ஒரு அரிய விருந்தாகும். வாழை மரங்கள், தோரணங்கள், வாசமிகு வண்ண மலர்கள் அனைத்தும் போட்டியிட்ட வண்ணம் இல்லங்களை அலங்கரிக்கும். காணும் இடங்கள் எல்லாம் கரும்புகள் நமது நாவுடன் உறவாட காத்திருக்கும். இஞ்சி கொத்து, மஞ்சள் கொத்து







கொண்டு புதிய பானைகள் அலங்கரிக்கப்பட்டு, புத்தம் புது அரிசியினால் வீட்டின் முற்றத்தில் வானம் பார்த்து ஆதவன் ஒளியில் புதிய மண் அடுப்பில் விறகுகள் கொண்டு எரித்து, பொங்கவிடப்படும். புத்தாடை அணிந்த குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் பொங்கி வரும் புதிய பானையை சுற்றி இணைவார்கள்.


பானையில் மணத்துடன் பொங்கி வரும் பொங்கலுடன் “பொங்கலோ பொங்கல், பொங்கலோ பொங்கல்” என்று மனதில் எழுச்சி பொங்க, ஆதவனை நோக்கி கூக்குரலிட்டு ஆரவாரமாக வழிபடுவார்கள்.

ஆண்டு முழுவதும் மழை பொழியவும், பயிர்கள் செழிக்கவும், மட்டற்ற மகிழ்ச்சியுடன் மங்கலம் பொங்கும் வாழ்வு மலரவும், மனதார பிரார்த்தனை செய்வார்கள். உத்தராயணம் இன்பமாகத் துவங்கும்.



**மூன்றாம் நாள் :**

மாட்டுப் பொங்கல் – கன்றுப் பொங்கல் – பட்டிப் பொங்கல் என்றெல்லாம் அழைக்கப்படும் திருநாள். மக்களின் வாழ்விலும் வயலிலும், உணவுக்கும் உழைப்புக்கும் என்றே ஒன்றிவிட்ட பசுக்களுக்கும், காளைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் வண்ணம் வழிபாடுகள் இருக்கும். மாட்டுத் தொழுவங்கள் சுத்தம் செய்யப்படும். காளைகளும், பசுக்களும், கன்றுகளும், மங்கள நீராட்டப்பட்டு, கொம்புகள் சீவப்பட்டு தோல் பட்டையில் சங்குகள், சலங்கை ஒலி எழுப்பும் மணிகள், வண்ண மயமான குஞ்சங்கள் கொண்ட கயிறுகள் அனைத்தும் இணைக்கப்பட



கழுத்து, கால், உடற் பகுதிகள் வண்ணமான உடைகளுடன், மணிகளுடன், மஞ்சள் குங்குமம் பூசி அலங்கரிக்கப்படும். அன்றாட தீவனங்கள் தவிர, அமுதம் போன்ற பொங்கலுடன் ஆராதனை தொடங்கும். மாட்டுத் தொழுவத்திலேயே பொங்கல் இடுவார்கள். புத்தம் புதிய பயிர் வகைகளுடன், தேங்காய், பழ வகைகளுடன் உணவிட்டு “பொங்கலோ பொங்கல், மாட்டு பொங்கல், பட்டி பெருக, பால் பெருக, பானை பொங்க, நோவும் பிணியும் தெருவோடு போக” என்று கூறி கால்நடைகள் அனைத்திற்கும், கற்பூர ஆராதனை காட்டி மகிழ்வார்கள்.

பல கிராமங்களில், குறிப்பாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பெரும் கூட்டமாகக் கூடி,





"ஜல்லிக் கட்டு" என்ற விளையாட்டினை கொண்டாடி மகிழ்வார்கள். காளைகளின் கொம்புகளில், இறுக்கமான சல்லிக்கட்டினை பொருத்தி இருப்பார்கள். அந்த கட்டினில் உயர்ந்த நாணயங்களை கொண்ட பரிசாக ஒரு முடிச்சு இருக்கும்.ஆக்ரோஷமான காளைகளை அடக்கி நிறுத்தி வெற்றி காண்பவர்களுக்கு அந்த நாணய மூட்டையே பரிசாகும். நாயக்க மன்னர்கள் ஆண்ட காலத்தில் சல்லி என்றால் காசு. அதை கட்டுவதால் சல்லிக்கட்டு எனவும், ஜல்லிக்கட்டு எனவும் பெயர் கொண்டு இருக்கலாம் என்பது ஆய்வாளர்கள் கருத்து.

**நான்காம் நாள் :**

கொண்டாட்டங்களின் இறுதியான நான்காம் நாள் இடம் பெறுவது காணும் பொங்கல் என்ற நிகழ்வு. இதனை பலர் கன்னிப் பொங்கல் என்றும், கணுப் பண்டிகை என்றும் குறிப்பிடுகிறார்கள். வழுக்கு மரம் ஏறுதல், உறியடி போன்ற கிராமப்புற வீர விளையாட்டுக்கள் மற்றும் பட்டிமன்றங்கள் உட்பட சுவையான பல கலை நிகழ்ச்சிகள் இளைஞர்கள் சிறுவர்களைக் கவரும் வண்ணம் இடம் பெறும். இறுதியாக அனைவரும் சுற்றமும் நட்பும் சூழ, முதியவர்களின் ஆசி பெற்று விடை பெறுவார்கள்.

இவ்வாறு சாதனைகள் கொண்ட சம்பிரதாயங்களை படைத்த சமுதாயம் ஒரு புறம், விஞ்ஞான வளர்ச்சி, நாகரீகம் என்ற பெயரில் கணினி/கைபேசி போன்ற தொலைதொடர்பு சாதனங்கள் மூலம் பல நன்மைகளோடு, நாகரீகமான பொழுது போக்குகள் வளர்ந்து விட்ட காரணத்தினால், பல தலைமுறைகளால் காப்பாற்றப்பட்ட, அன்பு செறிந்த, அறம் செறிந்த பல வகையான விழாக்கால அனுபவங்களை இழந்து நிற்கிறோம் என்பதும் மறு பக்கம் வேதனை நிறைந்த உண்மை.

இதுவரை காக்கப்பட்டு தொடர்கின்ற பல விழாக்களையும், சம்பிரதாயங்களையும், இனியும் விட்டு விடாமல் வரும் தலைமுறையினருக்கு வழிகாட்டி மகிழ்வோம்.




**ஸப்தகிரி வாசகர்களுக்கும், முகவர்களுக்கும், எழுத்தாளர் பெருமக்களுக்கும் எங்களுடைய உளங்கனிந்த இனிய பொங்கல் நல்வாழ்த்துகள்**

**2021**

**–பிரதான ஆசிரியர்**



## கோதை காட்டும் பாதை

# இன்னும் என்ன உறக்கம்?...

**அம்பிகை பாகன் வி.பி. அர்த்தநாரி**
**கோவை, 98842 89887.**



கண்ணனுக்கு மிகவும் பிரியமான ஆயர்பாடி மகளிர், அவன் பொழுது புலர்ந்து இன்னும் உறக்கத்திலிருந்து எழுந்த பாடில்லை. இவளுடைய பெற்றோர் எப்படிப்பட்டவர்கள்? ஆயர்பாடியிலே நூற்றுக்கணக்கான பசுமாடுகளைப் பரிபாலிக்கும் கோபாலன் அவளுடைய தந்தை. பசுக்கள் ஒவ்வொன்றாகக் கன்று போட்டுக் கொண்டேயிருக்கின்றன. ஆகையால், ஆண்டு முழுவதும் பல பசுக்களையும் கறந்து பெருகி வரும் பால்வளம் படைத்தவன் அவன். இப்படி பாலைக் கறந்து பசுக்களையும் கன்றுகளையும் பாலித்து குழந்தைகளை வளர்ப்பது போல் ஆவினங்களை வளர்க்கும் செல்வந்தன். அப்பெண்ணின் தந்தை பசுக்களை வளர்ப்பது மட்டுமின்றி கறந்த பாலை ஊருக்கெல்லாம் வழங்கும் தொழிலைச் செய்து வருபவன். பசுக்களைப் பராமரிக்கும் கடமை, பாலை எல்லோருக்கும் வழங்கும் தொழில் என்ற தன் கர்மாவை மனப்பூர்வமாகச் செய்பவன். கண்ணனுடைய கருணையால் பசுக்கள் நோய் நொடி இல்லாமல் பால் வளத்தை குறைவில்லாமல் வழங்கும் வள்ளல் பெரும் பசுக்களாக மாறிவிட்டன. எனவே, கண்ணனை விரோதித்துக் கொண்ட கம்சனையும் அவனுடைய ஆட்களையும் அழிக்கக் கூடிய திறல் பெற்றவன். இப்படிப்பட்ட கோபாலன் பெற்ற குலக்கொடி தான் இந்தப் பெண், இன்னமும் உறங்கிக் கொண்டிருக்கிறாள். அவள் பொன்கொடிபோல அழகிய வடிவும், மெல்லிய இடையும், பொன்னிற மேனியும் உடையவள் போலும்! ஒரு பொற்கொடி மஞ்சத்தில் கிடப்பது போல அவள் படுத்துக் கிடக்கிறாள். அவளுடைய மேனி அழகுக்கு மேலும் அழகூட்டுவது பாம்பின் படம் போன்ற அல்குலும், மயிலைப் போன்ற சாயலும் ஆகும். ஆகவேதான் கண்ணனும் இவள் பால் பேரன்பு வைத்தானோ என்று மற்ற ஆயர்குலப் பெண்டீருக்கெல்லாம் பெருமை கலந்த பொறாமை இருந்தாலும் இவளையும் எழுப்பி நம்முடன் கூட்டிக் கொண்டு கண்ணன் புகழ் பாட வேண்டுமென்பதே அவர்களின் விருப்பம்.

அநுமான் சீதையை முதன் முதலாக அசோக வனத்தில் தான் சந்திக்கிறான். அப்போது, சீதை எல்லா வகையிலும் இராமனுக்குப் பொருத்தமானவள் என்று தனக்குள்ளே சொல்லிக் கொள்கிறான். வயது, குணம், லக்ஷணம், குடிப்பிறப்பு எல்லா வகையிலும் இராமனுக்கு நிகர் சீதையே என்கிறான். இவ்வாறே கண்ணனுக்கும் எல்லா வகையிலும் நிகர்த்தவள் இந்த கோபிகை என்பதை ஆண்டாள் கூறுகிறாள். *''குற்றம் ஒன்றும் இல்லாத கோவலர் தம் பொற்கொடியே! புற்றரவல்குல் புனமயிலே!''* என விளிக்கிறாள்.







ஆயர்பாடியில் உள்ள அனைத்துப் பெண்களும் எழுந்து விட்டனர். அனைவரும் ஒன்று திரண்டு இந்த குலமகள் வீட்டு முற்றத்தில் வந்து நின்று கொண்டனர். சும்மா நின்று பொழுதைப் போக்கவில்லை. இப்படி படுத்து உறங்கும் பெண்ணை எப்படி எழுப்புவது? அவளுக்கு உகந்த காமம் கண்ணனின் திருநாமம். அவனுடைய பேரைக் கேட்டாலே அவளுக்கு தேன் பருகுவது போல இருக்கும். ஆகையால் நீலமேக முகில் வண்ணன் பேரைப் பாடிக் கொண்டிருக்கிறார்கள் அவளுடைய தோழிகள். கண்ணனின் நாமத்தைக் கேட்ட பிறகாவது இவள் எழுந்திருக்கிறாளா என்றால் அதுதான் இல்லை. அவள் விழிக்கவுமில்லை. ஏதும் வாய் திறந்து பேசவும் இல்லை; கண்ணனின் நாம சங்கீர்த்தனத்தின் ஒலியிலே அப்படியே மயங்கி இன்னும் உறக்க நிலையிலேயே இருக்கின்றாளாம். அவள் கண்ணனின் செல்வப் பெண்டாட்டியாகி விட்டாள் போலும்! ஆகையால் தான் இந்த மயக்கமோ? கிருஷ்ணானுபவத்தை தான் மட்டும் தனியே அனுபவிக்க அவள் செய்யும் தந்திரமோ இது! என்று எண்ணும்படி கண்ணனுடைய மோகத்தில் மூழ்கிக் கிடக்கிறாள். நீ மட்டும் கிருஷ்ணானுபவத்தை தனியே அனுபவிக்கக் கூடாது. எழுந்து எங்களோடு வா! என்று அழைக்கின்றனர் மற்ற தோழிகள். நீ பேசாமல் உறங்கும் பொருள் என்ன? தனியாக கண்ணனை அநுபவிக்கவா? என்று சீண்டுகின்றனர், அவளுடைய தோழிமார்கள். இப்படி தூங்கிக் கொண்டிருக்கும் பெண்ணை எழுப்பும் பாடலாக அமைத்துள்ளாள் ஆண்டாள்.

*''கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து*
*செற்றார் திறல் அழியச் சென்று செருச்செய்யும்*
*குற்றம் ஒன்றில்லாத கோவலர் தம் பொற்கொடியே!*
*புற்றரவல்குல் புனமயிலே! போதராய்*
*சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து நின்*
*முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாட*
*சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி! நீ*
*எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்''*



அடுத்த பாடலிலும் இந்தப் பெண்ணின் சகோதரனின் செல்வச் செழுமையை அழகாகச் சொல்கிறாள் ஆண்டாள். அவனிடம் பசுமாடுகள் மட்டுமல்ல, எருமை மாடுகளும் எண்ணற்றவை இருக்கின்றன. பசுமாடுகளைப் பாதுகாத்து பசும் பாலை எல்லாருக்கும் வழங்குகின்ற வேலைகளை கவனிக்கவே அவனுக்கு நேரம் போதவில்லை. ஆகையால் எருமைப்பாலைக் கறப்பதே கிடையாது. எருமைகள் கன்று போடுகின்றன. எருமைகள் இளங்கன்றுகளை நினைத்ததும் இயல்பாகவே பால் சுரக்க ஆரம்பித்து விடுகின்றன. கன்றுகள் குடித்து ஓய்ந்தபின்னும் பால் சுரப்பது நிற்கவில்லை. ஏனென்றால் அவன் எருமை மாட்டைக் கறப்பதே இல்லை. அவனுக்கு அதற்கு நேரமில்லை. கிருஷ்ண கைங்கரியத்திலும், பசுக்கள் கூட்டத்தை பரிபாலிப்பதிலும் அவன் பொழுதெல்லாம் செலவழிந்து விடுகிறது. எருமைகளின்



மடியிலிருந்து வழியும் பால் வீட்டின் முற்றத்தில் ஆறாக ஓடுகிறது. இதை கன்றுகள் மிதிக்க முற்றம் முழுதும் சேறாகி விடுகிறது. இத்தகைய பெருஞ்செல்வம் படைத்தவன் அத்தோழியின் சகோதரன்.

*“கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி*
*நினைத்து முலை வழியே நின்று பால் சோர*
*நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன்”*

என்று ஆண்டாள் இப்படியொரு வளமான காட்சியை நம்முன் வைக்கிறாள்.

நற்செல்வன் என்றால் மாட்டுச் செல்வம் மட்டும் அல்ல. கிருஷ்ணனிடம் பக்தி என்னும் செல்வம் கொண்ட உத்தமன் என்றும் பொருள் கொள்ள வேண்டும். கிருஷ்ண பக்தியும் நற்செல்வம் தானே. இப்படி இரண்டு வகையாலும் பொருட்செல்வம், அருட்செல்வம் ஆகிய இரண்டு செல்வங்களையும் பெற்ற உத்தம சகோதரன் அவன். அவனுடைய அருமைத் தங்கை இந்தப் பெண்.

அவளுடைய வீட்டு முற்றத்தில் மார்கழி மாத அதிகாலை வேளையில் மேலேயிருந்து பனி கொட்டுகிறது. கீழே தரையிலே வெண்மையான பால் கொட்டிக் கிடக்கிறது. ஆறாக ஓடி சேறாகி நிற்கிறது. மேலே பனி வெள்ளம். கீழே பால் வெள்ளம். இதயத்தில் கிருஷ்ணனைப் பற்றி நினைத்துக் கொண்டேயிருப்பதால் அன்பு (மால்) வெள்ளம். இப்படி எல்லாப் பக்கங்களிலும் வெள்ளக்காடாய் காட்சி அளிக்கிறது தோழிமார்களுக்கு,



*“பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி*
*சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
*மனத்துக் கினியானைப் பாடி”*

நிற்கின்றனர் ஆயர்குல மங்கையர். கண்ணனைப் பற்றி நினைப்பதற்கு முன்னால் அவனுடைய முந்தைய அவதாரமான இராமாவதாரம் அவர்களின் நினைவிற்கு வருகிறது.

சீதையை இராவணன் தன்னிடமிருந்து பிரித்த காரணத்தால் சினந்தவன் இராமன். அவன் தன் தவறை உணர்ந்து திருந்தாததால் அவனைக் கொன்று சீதையை மீட்க நேரிட்டது. இராமன் இத்தகைய மாவீரன் மட்டுமல்ல. அவன் மனதுக்கினியான். மனதுக்கு ரம்யத்தை அளிக்கும் இராமனை நாங்கள் பாடியும் நீ தூங்குவது சரியல்ல என்று அந்தப் பெண்ணை எழுப்புகின்றனர். “மனதுக்கினியான்” என்ற அழகிய நாமத்தை இராமனுக்கு சூட்டுகிறாள் ஆண்டாள். *“கற்பார் இராமனை யல்லால் மற்றும் கற்பரோ?”* என்று கொண்டாடியிருக்கிறார் ஆழ்வார். இராம நாமத்தைச் சொல்வது தேனினும் இனியது. இதனால் நாவும் இனிக்கும், உள்ளமும் இனிக்கும். ஆகையால் மனதுக்கு இனியவன் என்று இராமனைப் புகழ்ந்து பேசுகிறாள். இனிமையான இராம நாமத்தைக் கேட்கும் நீ வாய் திறக்கவில்லையே என்கின்றனர் தோழிகள். “மனதுக்கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்” என்கின்றனர். இனியாவது எழுந்திரு. எல்லாரும் வந்தாயிற்று. நீ ஒருத்தி தான் பாக்கி என்று கூறி அவளை எழுப்புகின்றனர்.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 53

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | | | | | ■ | 2 |
| | 3 | | | | | | 4 | | | ■ | |
| | ■ | 5 | | | | | | | | ■ | |
| | | | | 6 | 7 | ■ | | | | 22 | |
| | | | | | | ■ | | | | | |
| | | | | | | ■ | | ■ | 8 | | |
| | | | | | | | 9 | | | 10 | |
| | | 11 | 12 | ■ | | | | | | 13 | |
| | 14 | | | | | | ■ | 15 | | | ■ |
| 16 | | | | | | | | | | 17 | ■ |
| ■ | 18 | | | | | ■ | | | | 19 | ■ |
| 20 | | | | | | | | | | | 21 |

தொகுப்பு :
திரு. எஸ். ராஜகுமார்,
சென்னை, 8124930259

புதிருக்கு விடை அறிய
39ம் பக்கம்
பார்க்கவும்...

### இடமிருந்து வலம்

01. பெருமாள் கருடனுக்கு அபயமளித்த தலம்.....(9)
03. லலிதா சகஸ்ரநாமத்தை அகத்தியருக்கு வெளிப்படுத்தியவர்....(7)
05. நவதிருப்பதிகளில் ஒன்று.....(6)
14. ராகு காலத்தை பாம்பாக வைத்து பார்த்தால் முதல் அரை மணி நேரம்....(6)
15. ஸ்ரீகிருஷ்ணரின் நட்சத்திரம்....(3)
16. யசூர் வேதத்தின் இதயமாகக் கருதப்படுவது...(5)
18. நவநரசிம்மர் உள்ள இடம்.....(5)
20. சௌம்ய நாராயணன் அருள்புரியும் திருத்தலம்....(8)

### வலமிருந்து இடம்

10. பாம்பு கடித்து இறந்தவருக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்படி கருடனை நோக்கி செய்யும் நோன்பு .....(7)
13. பாண்டுவின் மகன் என்பதால் அர்ச்சுனனுக்கு ......(5) என்ற பெயரும் உண்டு.
17. ஒருவனுக்கு ஒருத்தி என்ற உன்னத தத்துவத்தை உணர்த்த திருமால் எடுத்த அவதாரம்....(7)
19. தெய்வமே கருணையோடு இறங்கி வந்து மனிதர்களுக்கு திதி கொடுக்கும் அற்புத தலம்....(4)
21. காக்கும் கடவுள்....(4)

### மேலிருந்து கீழ்

1. மண்டபத்தலங்களில் ஞான மண்டபம்...(9)




2. தொண்டைமான் மன்னருக்கு வெங்கடாசலபதி நேரில் வந்து கையில் செங்கோலுடன் மன்னரின் மனக்கண் முன் காட்சி கொடுத்தத் தலம்....(8)
4. ஜடாயுவின் அண்ணன்.....(4)
6. சஷ்டிக்கு அடுத்த நாள்.....(4)
7. சோளிங்கரில் உள்ள ஆஞ்சநேயர் கைகளில் இருப்பது...(8)

22. பக்தனுக்கு திதி கொடுத்த பரந்தாமன்.....(6)

### கீழிருந்து மேல்

08. திருமழிசையாழ்வாரின் சீடர்....(6)
09. சுதர்சனருக்கு உள்ள மொத்த திருக்கரங்கள்.....(4)
11. இலங்கைக்குச் சென்ற இராமபிரான் தன் வானரச் சேவையை அணிவகுத்து நிற்கச் செய்த இடம்....(5)
12. கேரளாவில் சத்ருக்கனனுக்கு கோயில் உள்ள இடம்...(5)
14. வருடத்தில் பொங்கல் நாளன்று மட்டும் திறக்கும் கோயில்....(6)

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

# மாமன்னர்களும் மலை மேல் நிற்பவனும்

ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்ரீ.உ.வே.
அ. கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி,
திருவரங்கம்,
98842 89887.

### முதலாம் விஜய நகர பேரரசர்கள் காலத்திய கல்வெட்டுகள் :

விஜய நகர பேரரசர்கள் திருவேங்கடவனுக்குப் பல கைங்கர்யங்களைப் புரிந்து உள்ளனர் என்பதை கல்வெட்டுகளின் மூலம் நாம் அறியலாம். அக்கல்வெட்டுகளுள் சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

1. சங்கம பேரரசர்கள் காலத்திய கல்வெட்டுகளுள், முதல் கல்வெட்டு முதலாம் புக்கர் (கி.பி.1355–1377) காலத்திய கல்வெட்டாகும். அந்தக் கல்வெட்டு, திருவேங்கடமுடையானுக்கு தினமும் 2 திருப்போனகம் சமர்ப்பிப்பதற்காக ஒரு கிராமத்தை மானியமாகக் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. இந்தக் கல்வெட்டு மிகவும் பழுதடைந்துள்ளதால், இதன் தேதி மற்றும் மானியமாகக் கொடுக்கப்பட்ட கிராமத்தின் பெயர் தெரியவில்லை (எண். 178 Vol.I). 219 மற்றும் 225 எண்களில் குறிப்பிடப்பட்ட "புக்கராயன் சந்தி" என்னும் காணிக்கை இதுவாக இருக்கலாம் என்று சாது சுப்பிரமணிய சாஸ்திரி தமது "திருப்பதி ஸ்ரீவெங்கடேச்வரா" என்னும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2. பிரபவ ஆண்டு ஜனவரி 18ஆம் தேதி கி.பி. 1388 ஆம் வருடம், அரிசானாலயன் பூந்தோட்டம் மற்றும் மடத்தின் மேலாளரான முல்லை. திருவேங்கட ஜீயர், பூங்கோடு கிராமத்திலிருந்து பெறப்பட்ட வருவாயில் 100 பணத்தைக் கொடுத்து, மாசி மாதத்தில் விஜய நகர பேரரசரான இரண்டாம் ஹரிஹரர் பெயரில் (கி.பி. 1377–1404) ஒரு உற்சவத்தை ஏற்படுத்தினார். கி.பி. 1390 ஆம் ஆண்டு, மேலும் 100 பணம், அந்த உற்சவத்திற்குத் தேவையானவற்றை பெறுவதற்காக கொடுத்துள்ளார் என்பதை கல்வெட்டு எண்கள் 185, 186 Vol.I,83 Vol.II குறிப்பிடுகின்றன.

இரண்டாம் தேவராயர் (கி.பி.1423–1446), டிசம்பர் 5ஆம் நாள் கி.பி. 1429 ஆம் ஆண்டு திருவேங்கடவனை தரிசித்த போது, மலையப்பனுக்கு ராஜ பண்டாரத்திற்கு உரிமையான விக்ரமாதித்ய மங்களம், இலமண்டியம் மற்றும் சித்ரகாலு ஆகிய மூன்று கிராமங்களை நன்கொடையாக அளித்துள்ளார். மேலும், 2200 தங்க வராகங்களையும், தினசரி அமுதுப்படிக்காக 33 தாம்பாளங்கள் நிறைந்த பிரசாதங்கள் செய்வதற்கான ஏற்பாடுகளையும் செய்துள்ளார். எம்பெருமான் திருமேனியில் தடவும் புனுகு எண்ணெய் வைப்பதற்கு என்றும், பரிமள தீர்த்தம் வைப்பதற்கு என்றும் இரண்டு பெரிய கிண்ணங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேலும், அச்வயுஜ மாதத்தில் (ஐப்பசி) 9 ஆம் நாள் உற்சவம் கொண்டாடுவதற்கும் ஏற்பாடு செய்துள்ளார் (எண்.192).

இவர் போல, புக்கர் – 1 இன் காலத்தில் அவரைப் போலவே அவருடைய அதிகாரிகளும் மற்றவர்களும் மலையப்பனுக்கு பல்வேறு கைங்கர்யங்கள் செய்துள்ளதை கல்வெட்டுகளின் மூலம் அறியலாம். இவர்கள் அளித்த கொடைகள் பற்றி கூறுபவை சுமார் 35 கல்வெட்டுகளுக்கும் மேல் உள்ளன. அவர்கள் கிராமங்களை மலையப்பனின் தினப்படி ஆராதனத்திற்கு தேவையான தானியங்களை அளிப்பதற்காக அளித்துள்ளனர். அக்காலத்தில் கொடியேற்றத்துடன் கூடிய உற்சவங்கள் 7ஆக உயர்ந்தன. இவ்வுற்சவங்களின் போது,



பக்தர்களுக்கு பலவகைப்பட்ட பிரசாதங்கள் வழங்கு வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவைத் தவிர கோடையில் கோடை உற்சவம், மார்கழியில் அத்யயன உற்சவம் போன்றவையும் கொண்டாடுவதற்கு மானியங் கள் வழங்கப்பட்டன. மலையப்பனுக்கு பல ஆபரணங்க ளும், பதக்கங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. பலர், நெய் தீபம் ஏற்றுவதற்காக பசுக்களை தானமாக அளித்துள் ளனர். இவ்வாறு பல கைங்கர்யங்களைப் புரிந்து, சங்கம வம்சத்தின் இரண்டாம் அரசரான புக்கர் – 1 காலத்தில் மலையப்பனை மகிழ்வித்துள்ளனர்.

அடுத்து, 15ஆம் நூற்றாண்டின் இறுதியில் மல்லிகார்ஜுனன் (கி.பி. 1447–1465) மற்றும் விரூபாஷன் (கி.பி. 1465–1485) ஆகிய இருவரும் விஜய நகர சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்தனர். அந்த சமயத்தில், சாளுவ நரசிம்மன் என்னும் தளபதி மிகவும் செல் வாக்குள்ளவராகவும், சாம்ராஜ்யத்தை கட்டிக் காத்தவரா கவும் இருந்ததாக நாம் திருப்பதியில் காணக்கிடைக்கும் பல கல்வெட்டுகள் மூலம் அறியலாம். சாளுவ நரசிம்மன் 44 ஆண்டுகள், விஜய நகர சாம்ராஜ்யத்தின் இராணுவ தலைவராக இருந்துள்ளார். அவர் மலையப்பனுக்கு புரிந்துள்ள கைங்கர்யங்கள் பல்வேறு கல்வெட்டுகளில் காணலாம். அவர் ஆனி மாதத்தில் டோலோத்ஸவத்தை ஏற்படுத்தியதாக கல்வெட்டு எண் 50 கூறுகிறது. அது தவிர பல உற்சவங்களுக்கு பிரசாதங்கள் சமர்ப்பித்துள்ளார். புஷ்கரணி நடுவில் வசந்த மண்டபம் கட்டியுள்ளார். பல்வேறு உற்சவங்களின்போது திருப்பள்ளியோடத் திரு நாள் ஏற்படுத்தியுள்ளார். பல மண்டபங்கள், திருமலைக் கோயிலின் முன் கோபுரம், திருப்பதியில் உள்ள கோவிந்தராஜ ஸ்வாமியின் கோயில் கோபுரங்கள் ஆகியவற்றை அமைத்துள்ளதாக கல்வெட்டு எண் 79 மற்றும் 34 கூறுகின்றன.

சாளுவ நரசிம்மன் கி.பி. 1482–இல் திருமலை அடி வாரத்தில் உள்ள முதற் கோபுரத்தைக் கட்டினான். இதற்கு

## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

*குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!*

**சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.**

***யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?***

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கடிதங்கள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

***பெரியோர்கள் செய்ய வேண்டியன...***

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

***நிபந்தனைகள் :***

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



குழந்தைகளே எழுதுங்கள்!
கோவிந்தன் திருவருளை
பெறுங்கள்!!

இராயர் கோபுரம் என்றும் பெயர். இவன் திருமலையிலும் திருப்பதியிலும் வேறு சில கோபுரங்களையும் மண்டபங்களையும் கட்டுவித்தான் (Vol.II, 28). அன்றியும், திருமலைக்குக் காப்பாக இருப்பதற்கு அழகிய சிங்கர் திருவுருவை அடிவாரத்தில் கந்தாடை ராமாநுஜ ஐயங்கார் கூறியபடி, கி.பி. 1482–ல் (273 - G.T.) நிறுவினான். இப்பெருமாள் "அடிப்புளி அழகிய சிங்கர்" எனவும், "ஶ்ரீநிவாசபுரம் அழகிய சிங்கர்" எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெற்றுள்ளார் (Vol.III, No.II). அடிப்புளிக்கு ஶ்ரீநிவாசபுரம் என்று வேறு பெயர் இடப்பட்டிருத்தலும் கூடும் எனத் தோன்றுகிறது. "அடிப்புளி" என்பது இப்போது "அலிபிரி" எனத் தவறாக வழங்கப்படுகிறது. (இராமாநுஜர், திருமலை அடியிலிருந்த ஒரு புளிய மரத்தின் அடியில் இருந்து இராமாயண பாடம் கேட்டு வந்தார். அப்புளியமரம் இருந்த இடம் அடிப்புளி என்று வழங்கப்படுகிறது). இவ்வுண்மை அறியாதார் சிலர், இஃது "அடிப்படி" என்றிருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றனர். ***"திருப்பதியும் ஆழ்வார் தீர்த்தமும் பூங்கா விருப்பும் அடிப்புளியின் வீறும்"*** (கண்ணி–98) என்று திருவேங்கட உலாவிலும் இவ்வடிப்புளி கூறப்பட்டிருத்தல் காண்க.

சாளுவ நரசிம்மனின் ஆசார்யரே கந்தாடை ராமாநுஜ முனி ஆவார். அவர் சாளுவ நரசிம்மனின் துணையோடு திருமலையப்பனுக்கும், திருப்பதி கோவிந்தராஜருக்கும் பல கைங்கர்யங்களைச் செய்துள்ளார். அவர் ஆற்றிய பணிகள் சிலவற்றை முன்னரே தந்துள்ளோம். மேலும், சிலவற்றை இப்பகுதியில் காணலாம்.

முன்காலத்தில் ரங்க பூபாலன் என்னும் ஒரு பாண்டிய மன்னன், பல அரசர்களைத் திசைதோறும் சென்று வெற்றி பெற்றுத் திருமலையில், தன் வெற்றிக்கு அறிகுறியாக ஒரு வெற்றிக்கம்பம் நாட்டினான் எனவும், அவனே இரகுநாதன் கோயிலைக் கட்டி, அப்பெருமானை இளைய பெருமாளோடும், சீதா தேவியோடும் அதில் நிறுவினான் என்றும் திருமலை ஒழுகு கூறுகின்றது. இப்பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனாதல் வேண்டும். இவனே திருமலை கோயிலுக்கு கி.பி. 1245 –இல் பொற்கலசம் அமைத்தான் என்று (T.T.172) கல்வெட்டு அறிவிப்பதால், இம்மன்னனே முதலில் அக்கோயிலைக் கட்டியவனாதல் வேண்டும். இவன் திருமாலுக்கு அடியவன். பல ஆண்டுகளுக்குப் பின் அக்கோயில் மிகப் பள்ளத்தில் ஆழ்ந்து விட்டது. அதற்குக் காரணம் ஊரின் தெருக்கள் உயர்ந்து கொண்டே வந்ததுதான். இதனை அறிந்த கந்தாடை இராமாநுச ஐயங்கார், சாளுவ வீரநரசிம்மராயன் கட்டளை பெற்று, கி.பி. 1480–ல் அக்கோயிலை உயர்த்தி இரகுநாதன் திருவுருவத்தையும் மேலுக்குக் கொணர்ந்து, மண்டபம் முதலியவற்றைக் கட்டினார். "நரஸிம்ஹாய உடையார்க்கு தர்மமாக திருப்பதி – பணம் இட்டு கோயிலும் கட்டுவித்து ரகுநாதனை" (Vol.II 73-73) என்று வரும் கல்வெட்டினைக் காண்க.

குமார ராமாநுச ஐயங்கார் என்பவர், அச்சுத தேவ ராயன் (கி.பி. 1529–1542) தருமமாக இரகுநாதனுக்கு கி.பி. 1530–ல் திருத்தேர் ஒன்றைச் செய்து, பங்குனித் திருநாளில் எட்டாம் நாள், அத்தேரில் பெருமாளை ஏற்றி விழாச் செய்தார். கோவிந்தராசர் கோயிலில் ஒரு இரகுநாதர் நிறுவப் பெற்றிருக்கிறார். இவர் கி.பி. 1488 –ல் பிரதிஷ்டை செய்யப் பெற்றவர். முதலில் தோன்றிய இரகுநாதன் இவருக்கு முன் தோன்றியவர் ஆதலாலும், வடிவத்தில் பெரியவர் ஆதலாலும், அவரை பெரிய இரகுநாதன் என்று சொல்லுவர். இவர் கோயில் அமைந்துள்ள இடமும், அதனைச் சார்ந்துள்ள தெருக்களும் இரகுநாதபுரம் என வழங்கப்பட்டன.

பெரிய இரகுநாதன் கோயிலுக்கருகே அப்பாண்டிய மன்னன், தன் குலத்தவரான குலசேகராழ்வாருக்கு ஒரு கோயில் கட்டினான் (திருமலை ஒழுகு). அக்கோயில் இருந்த இடம் குலசேகரபுரம் என வழங்கப்பட்டு, இப்போது துளசாபுரம் என மருவி வழங்கப்படுகிறது என்று சிலர் கருதுகின்றனர்.

ஆழ்வார் தீர்த்தக் கரைக்கண் உள்ள நம்மாழ்வார் கோயிலை, பல்லவராயர் என்னும் வானெடுத்த கையழகியார் என்பவன் கி.பி. 13–ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டி ஆழ்வாரைப் பிரதிஷ்டை செய்தான். இவன் பெயர் கடப்பை ஜில்லாவிலுள்ள நந்தலூர் கல்வெட்டில், ஜடாவர்மன் திரிபுவனச்சக்ரவர்த்திகள் சுந்தர பாண்டியன்–II (கி.பி. 1238–1253) ஆட்சிக் காலத்தில் ஒன்பது, பத்தாம் ஆண்டுகளில் இருந்ததாகக் காணப்படுகின்றது. இவன் பல்லவர் மரபைச் சேர்ந்த ஒரு சிற்றரசனாயிருக்கலாம் போலும். இவன் கி.பி. 1285– க்கு முன்னும் பின்னும் இருந்திருத்தல் வேண்டும். "ஸ்வஸ்தி ஶ்ரீ ஆழ்வாருடைய விமானமும் திருமண்டபமும் மாளிகையும் பாண்டி மண்டல மிழலைக் கூற்றத்து நடுவிற் கூறு துஞ்சனுருடையான் வாந் எடுத்த கையழகியரான பல்லவராயர் தர்மம்" (Ins. Vol. I.No.57) என்னும் கல்வெட்டினால் மேற்கூறப்பட்ட செய்தி விளக்கமாகிறது.

தொடரும்...

நமது தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அனுமன் திருக்கோயில் என்றால் அது நாமக்கல்லில் உள்ள ஆஞ்சநேயர் திருக்கோயில் தான். 1500 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த இந்த திருக்கோயில் ஆஞ்சநேயர் வரப்பிரசாதி. இந்த ஆஞ்சநேயரின் திருவுருவச் சிலை மிகவும் பிரம்மாண்ட மானது. பீடத்திலிருந்து 22 அடியும், பாதத்திலிருந்து 18 அடி உயரமும் கொண்டது. ஆஞ்சநேயரின் திருமுகம் மிகவும் தேஜஸுடன் அமைந் திருப்பது இந்த விக்ரகத்தின் தனிச் சிறப்பு. இதற்கு எதிரே அமைந்திருக்கும் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயத்தின் உபகோயில்தான் இந்த ஆஞ்சநேயர் கோயில் என்றாலும் இந்த ஆஞ்சநேயர் கோயிலில்தான் பக்தர் கூட்டம் அலை மோதுகிறது.

தமிழ்நாடு மட்டுமல்ல. அண்டை மாநிலங்களிலிருந்தும் கூட ஏராள மான பக்தர்கள் இங்கு வந்து இந்த ஆஞ்சநேயரைத் தரிசித்து தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்துகின்றனர். எதிர் பக்கத்தில் உள்ள ஸ்ரீலக்ஷ்மீ நரசிம்ம ஸ்வாமி ஆலயத்தைத் தொழுதபடி கூப்பிய கைகளோடு பிரம் மாண்டமாக நிற்கிறார். இந்த ஆஞ்சநேயர் காற்று, மழை, கடுமையான வெய்யில் இவைகளைத் தாங்கிக் கொண்டு பக்தியின் வடிவமாய் திறந்த வெளியில் மேல் விமானம் கூட இல்லாமல் நிற்பது தான் விசேஷம். லோக நாயகனான ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியே கோபுரம் இல் லாமல் இருக்கும் போது தாஸ னான எனக்கு மேல் கூரை எதற்கு என்று இந்த வெட்ட வெளியில் ஆஞ்சநேயர் நிற்ப தாக ஐதீகம். இச்சா சக்தி (நாமகிரித் தாயார்), கிரியா சக்தி (ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி), ஞான சக்தி (ஆஞ்சநேயர்) இந்த மூன்று சக்திகளும் ஒருங்கே அமையப் பெற்ற கோயில் இது.

# நாமக்கல் அருமை ஆஞ்சநேயர் பெருமை

**திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,**
**திருப்பதி, 94401 20758**









இனி இந்த கோயிலின் தலபுராணத்தைப் பார்ப்போம். இராமாயண காலத்தில் சீதா பிராட்டியை இராவணேஸ்வரனிடமிருந்து மீட்பதற்காக நடந்த போரில் இராவணனின் குமாரனான மாயாவி இந்த்ரஜித் சக்தி ஆயு தத்தை இளவல் இலக்குவனின் மீது வீச, இலக்குவனன் மூர்ச்சித்து சாய்ந்து விட்டான்.

தம்பியின் நிலை கண்டு ஸ்ரீராமன் கலங்க, விபீஷண னின் யோசனை யின் பேரில், இலங்கையின் ராஜவைத்தியரை அனுமன் அழைத்துக் கொண்டு வர, அவர் சில மூலிகைகளைச் சொல்லி அது வடக்கே இமாலய பர்வதத்தில் சஞ்சீவி மலை என்கிற குன்றின் மீது இருப்பதாகவும், விடி வதற்குள் அதைக் கொண்டு வந்தால் இளவலை மீட்கலாம் என்றுரைக்க, அனுமன் பரந்தோடினார். நெஞ்சிலே ராம நாமம், லட்சியத் தில் உறுதி, எத்தனையோ தடைகளை மீறி சஞ்சீவி பர்வதத்தையே பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து விட்டார் அனுமன்.

அதிலுள்ள மூலிகைகளின் மூலம் மருந்து தயாரிக்கப்பட்டு இலக்குவன் பிழைத்தான். அதைத் திரும்பவும் கொண்டு வைக்கப்போன போது அங்கே அனுமனுக்கு ஒரு சாளக்ராமம் கிடைத்தது. அதை எடுத்துக் கொண்டு திரும்ப வரும் போது, சூரியன் உதயமாக நித்யானுஷ் டானங்களை முடிக்க இந்தத் திருத்தலத்தில் இறங்கினார். அங்கே தவக்கோலத்திலிருந்த ஸ்ரீலக்ஷ்மி தேவியிடம் அந்த சாளக்ராமத்தைத் தந்து, தான் திரும்பி வரும் வரையில் பார்த்துக் கொள்ளும்படி வேண்டிக் கொண்டாராம். போகப்போக சாளக்ராமத்தின் கனம் அதிகமாக ஆக, அதைத் தாங்க முடியாமல் அந்த மலையின் மீது வைத்து விட்டாள் தேவி.

இதெல்லாம் எம்பெருமானின் திருவிளையாடல். திரும்பி வந்த அனுமனால் அந்த சாளக்ராமத்தை அசைக்கக் கூட முடியவில்லை. அப்போது அந்த சாளக்ராமமே விஸ்வரூபம் எடுத்து மலையாக மாற, அதிலிருந்து ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி தரிசனம் தர, தாயார் மகிழ்ச்சியோடு ஸ்ரீநரசிம்மரோடு இணைந்தாள். அந்த திருத்தலமே நாமக்கல்.

தன்னை, எம்பெருமானோடு சேர்த்து ஆஞ்சநேயருக்கு ஆசி கூறிய தோடு அவரையும் அங்கே நித்யவாசம் செய்யும்படி பணிக்க, இன்றளவும் அந்த மலையை நோக்கி கை கூப்பிய வண்ணம் அஞ்சலி ஹஸ்தத்துடன் நின்று கொண்டிருக்கிறார் ஆஞ்சநேயர். அந்த மலையே நாமகிரி எனவும், தாயார் நாமகிரித் தாயார் எனவும், மூலமூர்த்தியான ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி கிரிதர நரசிம்மர் என்றும் போற்றப்படுகிறார். ஆகவே பக்தர்கள் முதலில் இத்திருக்கோயிலுக்குள் சென்று தாயாரையும், ஸ்ரீநரசிம்மரையும் சேவித்து விட்டு பின்பு ஆஞ்சநேயர் கோயிலுக்குச் சென்று வழிபட வேண்டும்.

இங்கே தல விருக்ஷம் பலாமரம். தீர்த்தம் நாமகிரித் தீர்த்தம் என்றும், கமலாலயம் என்றும் அழைக்கப்பெறுகிறது. அரங்க நாயகித் தாயாருடன் அரங்க நாதர் சன்னதி, பெருந்தேவித் தாயாரோடு ஸ்ரீவரதராஜப் பெருமாள் சன்னதியும் உள்ளன. ஒரே சமயத்தில் நின்ற திருக்கோலத்தில்

ஸ்ரீவரதராஜப் பெருமாளையும், அமர்ந்த கோலத்தில் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியையும், கிடந்த கோலத்தில் திருவரங்கநாதப் பெருமாளை யும் பக்தர்கள் சேவித்து அருள் பெறலாம். மலையடிவாரத்தில் ஸ்ரீரங்க நாதப் பெருமாள், மலைக்கோட்டையில் ஸ்ரீவரதராஜப் பெருமாள், மலை உச்சியில் ஸ்ரீகிரிதர நரசிம்மர் என்று இந்த மலை முழுவதுமே சாளக்ராமத்தால் ஆனதால் வைஷ்ணவர்கள் இந்த மலையைப் புனிதமாகப் போற்றுகின்றனர். தேவசிற்பியான மயனால் வடிவமைக் கப்பட்டது.

இந்தத் திருக்கோயில் குடவரைக் கோயில். பிற்காலத்தில் பல்லவ மன்னர்களாலும், தொண்டை மண்டலத்தை ஆண்ட அதியமானின் வழி வந்தவர்களும் கோயிலின் திருப்பணிகளை மேற்கொண்டதாக கோயில் கல்வெட்டுகளில் உள்ளது. ஸ்ரீநரசிம்மர் சன்னதியின் நேர் எதி ரில் உள்ள சுவற்றில் இருக்கும் சிறிய துவாரத்தின் வழியாக எதிர் திசை யில் கூப்பிய கரங்களுடன் நிற்கும் ஆஞ்சநேயரைத் தரிசனம் செய்யலாம்.

தனிச் சன்னதியில் கோயில் கொண்டிருக்கும் நாமகிரித் தாயார் கணித மேதையான இராமாநுஜர் கனவில் தோன்றி பல கடின மான கணித கோட்பாடுகளை அருளியதாகவும் அவற்றை இன்று வரை கணித ஆராய்ச்சியாளர்களால் கூட கண்டறிய முடியவில்லை என்றும் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

இனி நாமக்கல் ஆஞ்சநேயருக்கு செய்யப்படும் நேர்த்திக் கடன் களையும், தீரும் பிரச்சனைகளையும் பார்ப்போம்.

**வடைமாலை நேர்த்திக் கடன்:**

ஒரு சமயம் நவகிரகங்களுள் கெட்ட கிரகமாகக் கருதப்படும் ராகுவும், சனியும் ஆஞ்சநேயரைப் பிடிக்கப் போய் முடியாமல் தோல்வியுற்றதால் அவருடைய சொற்படி கேட்பதாக ஒப்புக் கொண்டனராம். ஆகவே ராகுதோஷம், சனி தோஷம் உள்ளவர்கள் ராகு கிரகத்துக்குப் பரிகாரமான உளுந்தைக் கொண்டு வடை தட்டி, அதை சனி கிரகத்துக்குப் பரிகாரமான எள் எண்ணையில் வறுத்து அதை மாலையாகக் கோர்த்து இந்த ஆஞ்சநேயருக்கு சமர்ப்பித்தால் அந்த கிரகங்களால் பீடிக்கப்பட்டவர்கள் நலமடைவதாக நம்பிக்கை.

அதே போல் நல்லெண்ணெய் அபிஷேகம் செய்தால் பித்ரு தோஷ நிவர்த்தியும், பஞ்சாமிருத அபிஷேகம் செய்தால் எண்ணிய காரியத்தில் வெற்றியும், சந்தன அபிஷேகம் செய்வதால் பொருளா தார மேம்பாடும், சியக்காய் அபிஷேகத்தால் மனோசக்தி மேம்படு வதோடு நற்புத்தி, கீர்த்தி, நோயின்மை ஏற்படும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. பாலாபிஷேகம் செய்தால் பருவ காலங்களில் மழை பெய்து விவசாயிகள் பலனடைவார்களாம். மொத்தத்தில் இந்த நாமக்கல் ஆஞ்சநேயர் வரசக்தி ஆஞ்சநேயர்.









இந்த ஆலயத்தில் நடைபெறும் முக்கியமான திருவிழாக்களைப் பற்றி தெரிந்து கொண்டால் வழிபட வரும் பக்தர்களுக்கு சௌகர்யமாக இருக்கும். ஸ்ரீநரசிம்ம ஸ்வாமி கோயிலுக்கு உபகோயிலாக இந்த ஆஞ்சநேயர் திருக்கோயில் இருப்பதால் திருவிழாக்கள் சேர்ந்தே நடைபெறுகின்றது. சித்திரையில் வருட பிறப்பு, திருவாடிப்பூர உற்சவம், ஆவணியில் பவித்ரோத்ஸவம், ஆனியில் ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி.

ஆவணியில் ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி, புரட்டாசி சனிக்கிழமைகள், நவராத்திரி உற்சவம், கார்த்திகையில் தீபோத்ஸவம், மார்கழி மூலம் அனுமத் ஜெயந்தி, வைகுண்ட ஏகாதசி, தை மாதம் சங்கராந்தி என்று விழாக்கள் கோலாகலமாகக் கொண்டாடப் படுகின்றன. வருடாந்திர பிரம்மோத்ஸவம் பங்குனியில் 15 நாட்கள் தெப்பத்தில் தொடங்கி தீர்த்தவாரியில் முடிவடைகிறது.

## பேருந்து, ரயில் வசதிகள்



நாமக்கல் ரயில் நிலையத்திலிருந்து 2 கி.மீ. தொலைவிலும், பேருந்து நிலையத்திலிருந்து 1 கி.மீ. தொலைவிலும் இக்கோயில் உள்ளது. பேருந்து நிலையத்திலிருந்தும், ரயில் நிலையத்திலிருந்தும் கோயிலுக்கு வருவதற்கு ஆட்டோ வசதிகள் உண்டு. தங்கி இருந்து பரிகாரங்கள் செய்ய தங்கும் வசதிகளும் உண்டு. அனைத்து பேருந்து, ரயில் வண்டிகளும் நாமக்கல் ரயில் நிலையத்தில் நிற்கும். அதேபோல தமிழ் நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் இங்கு வர பேருந்து வசதி உண்டு.

ஸ்ரீராம நாமத்தைச் சொன்னாலே அங்கே அனுமன் இருப்பதாக ஐதீகம். இந்த நாமக்கல் ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயரை வழிபட்டால் நமக்கு எல்லா நன்மைகளும் உண்டாகும். அதே போன்று வேண்டிய வரங்களைத் தரும் ஸ்ரீநரசிம்ம ஸ்வாமியும் நாமகிரித் தாயாரையும் வழிபட்டு புண்ணியம் பல கோடி பெறலாம்.

*"ஆஞ்ஜநோ நந்தனம் வீரம் ஜானகி சோக நாசனம்*
*கபீஸ மக்ஷணந்தாரம் வந்தே லங்கா பயங்கரம் |*
*மனோஜவம் மாருத துல்ய வேகம் ஜிதேந்த்ரியம் புத்தி மதாம் வரிஷ்டம்*
*வாதாத்மஜம் வானரயூத முக்யம் ஸ்ரீராமதூதம் சிரசா நமாமி ||"*

# பாகவதர்களின் பெருமையை உணர்த்திய தொண்டரடிப்பொடியாழ்வார்



திரு. எஸ். சுதர்ஸனம்,
நங்கைநல்லூர், 99625 88065

திருமண்டங்குடி என்னும் கிராமத்தில் ப்ரபவ வருடம் (கலி 298) மார்கழி மாதம் கேட்டை நட்சத்திரத்தில், ஸ்ரீவைஜயந்தி வனமாலிகா அம்சமாய் அவதரித்தவர் தொண்டரடிப்பொடியாழ்வார். பெற்றோர் விப்ர நாராயணன் என்று பெயர் சூட்டினாலும், பாகவத கைங்கர்யமே உயர்ந்தது என்பதை நிலை நாட்டியவர் என்பதால் "தொண்டரடிப் பொடியாழ்வார்" என்று அழைக்கப்பெற்றார்.

பகவத் கைங்கர்யம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வாழும் பாகவதர்களே மேன்மையானவர்கள், பாகவதர்களின் பாத தூளிகளே தமக்குப் போக்கிடம், பாகவதர்களுக்குத் தொண்டு செய்வதே லக்ஷியம் என்று வாழ்ந்தவர் தொண்டரடிப்பொடியாழ்வார். இங்ஙனே, குலசேகராழ்வாரும் அரங்கா! அரங்கா! என்று பகவந் நாம சங்கீர்த்தனம் செய்யும் ஸ்ரீவைஷ்ணவ அடியார்களின் பாததூளியில் குடைந்தாடப் பெறுவது புனித கங்கையில் நீராடுவதால் உண்டாகும் ஆனந்தத்தை விட அதிக சந்தோஷம் உண்டாகும் என்பதை, அதாவது புண்ணிய நதித் தீர்த்தங்களை விட பரிசுத்தமான ஸ்ரீவைஷ்ணவர்களின் சம்பந்தம் புனிதமானது என,

*"ஆடிப்பாடி அரங்கவோ! என்றழைக்கும் தொண்டரடிப் பொடி*
*ஆட நாம் பெறில், கங்கை நீர் குடைந்தாடும் வேட்கை என்னாவதே?"*

– பெருமாள் திருமொழி 2.2

என்று பாகவதர்களின் பெருமையை குலசேகராழ்வாரும் போற்றியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. ஆகவே பாகவதத் தொண்டன் பெருமையையும் மஹிமையையும் உலகுக்கு உணர்த்திய மஹான் தொண்டரடிப்பொடியாழ்வார். இவ்வாழ்வார் தான் அருளிச் செய்த திருப்பள்ளியெழுச்சி என்னும் திவ்யப்பிரபந்தத்தில், பத்தாவது பாசுரத்தில் *"தொண்டரடிப்பொடி என்னும் அடியனை அளியன் என்று அருளி, உன் அடியாருக்கு ஆள்படுத்தாய்"* என்று பிரார்த்திக்கிறார். பகவத் கைங்கர்யத்திற்கும் மேலானது பாகவத கைங்கர்யம் என்பதை உணர்த்துகிறார். பாகவத கைங்கர்யம் செய்தால் மட்டுமே பகவத் சேஷத்வம் நிறைவு பெறும் என்பதைத் தெள்ளத் தெளிவாக நமக்கு உபதேசம் செய்கிறார். அடியார்களின் பாத தூளி படுவதாலே இவ்வுலகம் பாக்கியம் செய்தது என்பதை உறுதி செய்கிறார்.

*"தொண்டு செய்து துளவத்தால் துலக்கினான் வாழியே*
*தொண்டரடிப்பொடியாழ்வார் துணைப்பதங்கள் வாழியே"*

என்று ஸ்வாமி அப்பிள்ளை பாடுகிறார்.

பாகவதர்களில் உத்தமமானவர்கள் ஸ்ரேஸ்டர்களான ஆசார்யர்கள். ஆசார்யனுக்கு ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்தத்தில் ஒரு தனிச் சிறந்த இடமும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஆசார்யனின் திருவடிகளில் சரணடைந்து விட்டால், ஆசார்யன் நம்மை எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளில் சேர்த்து விடுவான். பகவானின் திருவடிகளில் நம்மைச் சேர்ப்பது ஆசார்யன் பொறுப்பு. (அம்ருத ரஞ்ஜனி.1)

*"தம் பரமென்றிரங்கித் தமரா*
*மனந்தந்து அருளால்*
*உம்பர் தொழும் திருமால் உகந்து*
*ஏற்கும் உபாயம் ஒன்றால்*



*நம் பிறவித் துயர் மாற்றிய ஞானப் பெருந்தகவோர்*
*சம்பிரதாயம் ஒன்றிச் சதிர்க்கும் நில் சார்ந்தனமே''*

ஆசார்யன் செய்யும் பேருதவியை ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் நமக்குணர்த்துகிறார். நம்மை கண்ணிமை போல் காப்பாற்றி, நம் பிறவிச் சொத்தான ப்ரபத்தியை – சரணாகதியைச் செய்ய நமக்கு வழி வகுத்துக் கொடுப்பவர் ஆசார்யன். ஞானமும் தகவும் நிரம்பப் பெற்ற மஹானான ஆசார்யன், நம்மை போன்றவர்கள் நல்வழியில் அழைத்துச் சென்று காப்பாற்றுவதைத் தம் பொறுப்பு என்று கருதுபவர்.

*''பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்*
*செயல் நன்றாகத் திருத்திப் பணி கொள்வான்''*

என்று மதுரகவியாழ்வார் அருளிச் செய்தது போல், எம்பெருமான் உகக்கும் உயர்ந்த உபாயமான சரணாகதியை நமக்கு உபதேசிப்பவன் ஆசார்யன். நாம் பிறவிப் பிணியில் பிறவித் துயரத்தில் விழாமல் இருக்க வழி வகுப்பவர் ஆசார்யன். நம் கலக்கத்தைப் போக்கி நம்மை நல்வழிப்படுத்திக் காப்பாற்றுபவர் ஆசார்யன்.

பரிசுத்தமான பாகவதர்களின் பெருமையை உணர்த்தியவர் தொண்டரடிப்பொடியாழ்வார். பிறப்பினாலோ உயர்ந்த படிப்பாலோ நல்லொழுக்கக் குடியில் பிறந்ததாலோ அரங்கனை அணுக முடியாது. பகவத் கைங்கர்யம் மேலும் பாகவதக் கைங்கர்யம் செய்யும் பாகவதர்களையே அரங்கன் ஏற்றுக் கொள்கிறான் என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

உயர்ந்த குலம் வேண்டாம். வேதம் தரும் ஞானம் வேண்டாம். பாகவதர்களுடன் தொடர்பு கொண்ட சம்சாரிகளும் அத்தொடர்பு காரணமாக பரிசுத்தமடைவார்கள் என்கிறார். இழிவான கேவலமான செயல்களைச் செய்பவர்களாயினும் *''தேனுலாம் துளப மாலை''* அணிந்த ரங்கனின் பெருமை பேசுபவர்கள் புனிதமடைகிறார்கள். புனிதமடைந்த அம்மஹான்கள் தாம் அமுது செய்து மிஞ்சிய பிரசாதத்தைப் பிறருக்கு அளிக்க, அப்பிரசாதம் உண்டவர்களும் அப்போதே புனிதமடைகிறார்கள் என்கிறார். உயர்ந்த அனுஷ்டானத்தாலும், பகவந் நாம ஜபத்தாலும், பகவந் நாம சங்கீர்த்தனம் செய்வதாலும் புனிதமடையும் பகவத் அடியார்கள் தங்களுடன் கூடியிருப்பவர்களையும், தன்னுடன் தொடர்பு கொள்ளும் பாகவதர்களையும் பரிசுத்தமாக்குகின்றார்கள் என்கிறார். இதோ பாசுரம் (திருமாலை – 41).

*''வானுளார் அறியலாகா வானவா என்பராகில்*
*தேனுலாம் துளபமாலைச் சென்னியாய் என்பராகில்*
*ஊனமாயினகள் செய்யும் ஊனகாரகர்களேலும்*
*போனகம் செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே''*

*''தேனுலாம் துளபமாலை சென்னியா''* – திருத்துழாய் மாலையை தன் திருமுடியில் அணிந்திருப்பவனே புனிதத்தன்மை பெறலாம் என்கிறார். இப்புனிதவான்களைச் சார்ந்தவர்களும், இவர்கள் சேர்த்தியால் இன்பம் அடைவார்கள் என்கிறார். இழிவான தொழிலும், இழிந்த ஜாதியும், இழிவான சம்பந்தமும் பகவத் பாகவத கடாக்ஷத்தால் அழிந்து போகிறது. சமுதாயத்தில் பிறர் மதிக்கும் நிலை வந்து சேரும். அழியாத செல்வத்துடன், மதிப்புடன் வாழும் நிலை வந்தடையும் என்பதே ஆழ்வாரின் உபதேசம்.

சதுர்வேதிகளைப் பார்த்து அரங்கன் பேசுகிறான். “சதுர்வேதிகளே பிரம்மா முதல் இந்நாள் வரை, எந்தை தந்தை தந்தை தந்தை தன் மூத்தப்பன், ஏழ்படிகால் தொடங்கி வந்து வழி வழி ஆட்செய்யும் நீண்ட பரம்பரையில் தோன்றிய குற்றமற்றவர்களே! எனக்கு (பகவானுக்கு) அடிமைப்பட்டவர்கள் பயன்/பலன் கருதாது சுயநலமில்லாத கைங்கர்யம் செய்து இவர்கள் இழி குலத்தவர்கள் என்று பார்க்காதீர்கள்.

என் (பகவானுக்கு) அடியார்களாகில், அவர்களைத் தொழுதெழுங்கள். அவர்களிடம் சமர்ப்பணம் செய்யுங்கள். அவர்களுக்கு உபதேசம் செய்யுங்கள். பகவத் விஷயத்தை அவர்களிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். அவர்களிடம் நல்ல கருத்துக்கள் இருந்தால் அதைப்

## 85 சாஸ்த்திர நீதிகள்



மாத்ரு ஹீந சிசு ஜீவநம்
வ்ருதா காந்த ஹீந தபபெ: |
வ்ருதா சாந்தி ஹீந தபஸ:
பலம் வ்ருதா திந்ரிணீ ரச-
- விஹீண போஜனம்: ||

1. தாய் தகப்பன் இல்லாத குழந்தை சரியாக வளராது!
2. கணவன் இல்லாத யௌவனப் பெண்ணும் சரியாக இருக்க முடியாது!
3. பொறுமை இல்லாமலும், கோபப்பட்டுக் கொண்டு பாராயணங்களை செய்வதும் விரயமே!
4. உப்பு, புளி சரியாக போட்டு செய்யாத உணவும் விரயமாம்!

**தொகுப்பு:**
**திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.**

பெற்றுக் கொள்ளத் தயங்காதீர்கள். இப்பொருளமைந்த பாசுரம் இதோ (திருமாலை 42)

*"பழுதிலா ஒழுகல் ஆற்றுப் பல சதுப்பேதிமார்கள்!*
*இழிகுலத்தவர்களேனும் எம் அடியார்களாகில்*
*தொழுமின் நீர் கொடுமின் கொண்மின் என்று நின்னோடும் ஒக்க*
*வழிபட அருளினாய் போல் மதிள் திருவரங்கத்தானே!"*

பாகவதர்களைப் பழிக்காதே என்று உபதேசம் செய்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார். இழிகுலத் தவர்களாயிருக்கலாம், ஆனால் பகவத் கைங்கர்யம் செய்யும் உயர்ந்த பண்புடையவர்களைப் பழிக்காதீர்கள்.

அப்படிப் பழித்தால் அந்த க்ஷணத்திலேயே உங்கள் பிராம்மணத்வம் கெடும். தூஷிக்கும் அந்த நொடிப் பொழுதிலேயே நீங்கள் புலையராக வாய்ப்புண்டு. பாசுரம் அனுபவிப்போம் (திருமாலை 43).

*"அமரவோர் அங்கமாறும் வேதமோர் நான்கும் ஓதி,*
*தமர்களில் தலைவராய சாதி அந்தணர்களேனும்*
*நுமர்களைப் பழிப்பராகில் நொடிப்பதோர் அளவில்*
*ஆங்கே அவர்கள் தாம் புலையர் போலும் அரங்கமா நகருளானே!"*

இந்த பூவுலகில் எவ்விதப்பிறப்பு என்பது முக்கிய மில்லை. ஜாதி, தொழில் என்பதும் முக்கியமில்லை. எம்பெருமான் திருமாலுக்கு ஆட்பட்டவன் என்ற பெயர் கிடைத்தால் போதுமானது.

எம்பெருமான் வடிவழகில், கல்யாண குணங்களில் ஈடுபட்டுத் தன்னை இழப்பவன் உண்மையான ஸ்ரீவைஷ்ணவ பாகவதன். பகவானைப் பயில்வது, அனுபவிப்பது, அதுவும் பயன்/பலன் கருதாமல் பகவானின் திருவுள்ள உகப்பிற்காக மட்டுமே பகவானை நாடுபவர்கள் உண்மையில் பாகவதர்கள். அவர்களே பகவத் அடியவர்கள். அவர்கள்

*"நாளும் பிறப்பிடை தோறு எம்மை ஆளுடை நாதரே"*

*"ஓதும் பிறப்பிடை தோறு எம்மை ஆளுடையார்களே"*

*"எமக்குஎம் பெருமக்களே"*

*"எம்மை சன்ம சன்மாந்திரம் காப்பரே"*

*"எம்மை நாளுய்யுக் கொள்கின்ற நம்பரே"*

*"எந் தொழுகுலம் தாங்களே"*

என்று பாகவதர்களின் பெருமையை ஆழ்வார்கள் பாடுகிறார்கள். ஆழ்வார்கள் காண்பித்த வழியில் சென்று, பாகவதர்களிடம் சரணமடைந்து, உய்வோம் வாருங்கள்.



### ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்-21

புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ ஜடரே சயனம்|
இஹ ஸம்ஸாரே பகுதுஸ்தாரே
க்ருபயாऽ பாரே பாஹி முராரே||

**இந்த உலகத்தின் இயக்கத்தில் பிறக்கிறோம்... மரணமடைகிறோம்... மீண்டும் பிறக்கிறோம்... மீண்டும் மரணமடைகிறோம்... இவ்வாறு (மனிதனா கவோ, மிருகமாகவோ, பக்ஷியாகவோ, புழு பூச்சியா கவோ) மீண்டும் மீண்டும் பிறப்பதற்கான கர்ப்ப வாசம் ஏற்படாதவாறு ஹே முராரே... என்னை காப்பாற்று வாய்.**

**(முரன் என்ற அரக்கனை கொன்றதால், கிருஷ்ணருக்கு முராரி என்று பெயர்).**

**- திரு. சீதாராமன், சென்னை.**

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

திருவேங்கடமுடையானை துதித்து ஸ்ரீவாதிராஜர் கன்னடத்தில் ஏராளமான எளிய சொற்களால் ராகதாளத் துடன் பாடுவதற்கு ஏற்றவாறு கீர்த்தனைகளை இயற்றி யுள்ளார். அவற்றில்

*"நாராயணன நெநெ மனவே"*
*"ஈதனே லோக குருவேத விக்யாத"*
*"ஆஞ்சநேயனே அமரவந்தித"*
*"முத்து முகதாதனம்ம"*
*"ஒந்து பாரி ஸ்மரணே சாலதே"*
*"நெநெவெ நநுதின நீல நீரத வர்ணன குணரன்னந"*

போன்ற வரிகள் கொண்ட கீர்த்தனைகள் மிகச் சிறந் தவை. மேலும், ஸ்ரீவாதிராஜர் சமஸ்கிருதத்தில் "தசாவதார ஸ்துதி"யை கம்பீரமான எளிய சொற்களால் இனிமை யாகப் படைத்துள்ளார். கன்னட மொழியில் இவர் இயற் றிய *"பானவமாடுவேனுநா மனதணிய நாமாம்ருதவ"* என்ற பாடலில் ஸ்ரீநிவாசனின் நாமங்கள் தேனை விட மிக இனிமையானது என்றும், சர்க்கரையை விட இனிமையானது என்றும், பேரிச்சம் பழம், உலர்ந்த திராட்சை ஆகிய வற்றை விட இனிப் பானது என்றும், இந்நாமங்களை பஜனை செய்து வழி பட்டால் மோட்சம் கிட்டும் என்றும் சொல்கிறார். *"சாரி தேனோ நின்ன வேங்கடரன்ன"* என்ற மற்றொரு கீர்த்தனையில் நான் அனாதை. எனக்கு சொந்தம் பந்தம் அனைத்தும் தாமே. உன்னுடையவன் நான். என் மேல் அருள் புரிந்து நீயாக எனக்கு கருணை காட்டு. என் தவறுகளை எண்ணிக்கையில் வைக்காதே. சேஷாசல வாசா! இவ்வுல கத்தில் உள்ள பக்தர்களுக்கு எவ்விதத் தில் அருள் புரிகிறாயோ, அவ்வாறே என்னையும் காப்பாற்று என்று வேண்டுகிறார்.

ஸ்ரீவாதிராஜர் திருவேங்கடமுடையானிடத்தே தசாவ தாரங்களையும் கண்டு தம் கீர்த்தனைகளால் துதித்துப் பாடினார்.

*"மன்னி சோ ஸ்ரீவேங்கடேச மஞ்சுகுணி புரவாசா!*
*.... ச்ரீசதியப்ராணேஷ ஸ்ரீஸ்ரீநிவாசா!"*

பல்வேறு இடங்களில் இருந்து வருகைபுரியும் பக்தர்களுக்கு வேண்டும் வரங்களை அருளும் இறைவா! ஸ்வாமியே! பிரகாசிக்கக்கூடிய சந்திரன், சூரியன், லக்ஷ்மி பிராணநாதன் மற்றும் ஸ்ரீநிவாசன் என்று கூறு கிறார்.

*"வாரிதியோளகாடிதெ! கிரியபென்னலி எத்திதே!*
*...வரத ப்ரசன்ன ஹயவதன வேங்கடராய*
*பொரெயோ எந்தெந்து என்னவநன்னு!"*



# தாஸ சாகித்யத்தில் திருவேங்கடவன்


தெலுங்கு மூலம்:
திரு. எஸ். நாகராஜாசார்யுலு
தமிழாக்கம்:
திரு. வி. வேங்கடரமணா

மேலே கூறப்பட்டுள்ள பாடலில் கடலில் ஆடினாய் என்றும் (மத்ஸ்யாவதாரத்தில்), மலையை முதுகில் சுமந்தாய் என்றும் (கூர்மா வதாரத்தில்), பாரமான பூமியை கொண்டு வந்தாய் என்றும் (வராஹ அவதாரத்தில்), பலியை கொன்றாய் என்றும் (வாமன அவதா ரத்தில்), இரண்ய கசிபுவை கொன்றாய் என் றும் (நரசிம்ம அவதாரத்தில்), துஷ்ட அரசர் களை அடக்கினாய் என்றும் (பரசுராம அவ தாரத்தில்), தருணிற்கு அபயம் தந்தாய் என் றும், சபரிக்கு அனுக்கிரஹத்தை அருளினாய் என்றும் (இராமாவதாரத்தில்), மரங்களை அழித்தாய் என்றும் (யமளார்ஜு" வ்ருக்ஷங் களை அழித்தாய் – கிருஷ்ணா வதாரத்தில்), புர நாரிமணிகளை வென்றாய் என்றும் (புத்தாவ தாரத்தில்), குதிரையின் மேல் ஏறினாய் என்றும் (கல்கி அவதாரத்தில்) இவ்வாறு தசாவ தாரத்தில் ஸ்ரீநிவாசனைப் பற்றி புகழ்ந்து பாடி தம்மைக் காப்பாற்றுவாயாக என்று துதித்தார்.

இவர் இயற்றிய கீர்த்தனைகள் அனைத் தும் தத்துவம், சிந்தாந்தம் ஆகியவற்றைக் கொண்டது. சந்தேகம் அற்றவை, தெளிவா னவை மறுக்க முடியாதவை. *''ஸ்ரீசா நீ நஹுதோ சேஷாசலவாச நீ நஹுதோ''* என்ற கீர்த்தனையில் ஸ்ரீநிவாசனை ஸ்வாமி! லக்ஷ்மி தேவிக்கு ஈசன் (கணவன்), சேஷாசல வாசன் என்பது பொருளா கும்.



*''வைகுண்டோ வேங்கடகிரி: வாசுதேவோ! ரமாபதி: மாயாவி, பரமானந்தம் த்யக்யா வைகுண்டமுத்தமம்! ஸ்வாமி புஷ்கரிணி தீர ரமயா சஹமோததே!''* என்ற புராண வாக்கியத்தின் மூலம் பூவைகுண்டம், வேங்கடபர்வதம், ரமாநாதனான ஸ்ரீமஹா விஷ்ணுவே திருவேங்கடமுடையான். அதற்கும் மேல், வைகுண் டத்தை விடுத்து லக்ஷ்மி தேவியுடன் இம்மலையின் மேல் உள்ள ஸ்வாமி புஷ்கரணியின் அருகே எழுந்தருளியுள்ளார்.

*''சேஷ சயன சுரேச வந்திதா சேஷ ஜனரனு பாலிசி பட்டி*
*காசு சேரிசி கண்டட்டு கட்டுவ காசக்கிதிம்மப்ப நீநே''*

ஸ்ரீநிவாசா தாங்கள் சேஷசயனன், இந்திராதி தேவதைகளால் வழிபடக்கூடியவன், அனைத்து மக்களையும் காப்பாற்றுபவன். வட்டிகாசுக்காரன் என்று கூறுகிறார்.

*'''தந்தே நீநஹுதோ கருணா சிந்து நீ நஹுதோ*
*அந்து த்ருபதன நந்தநேய எளதந்து காசியமாடுதிரலு*
*முந்தே பந்து அக்ஷயவெந்து சலிஹித*
*மந்த ஹாசமு குந்தனு நேநெ!!''*

தந்தை நீ, கருணைக்கடல் நீ! அன்று பலர் கூடியிருந்த அவை யில் திரௌபதிக்கு ஆடையளித்து காப்பாற்றிய ஸ்ரீகிருஷ்ணர் நீதான் என்று சொல்கிறார்.

*''ஏவம் ஸ்ரீகிருஷ்ண ரூபேண க்ரீடதே வேங்கடாசலே*
*தீர நீ நஹுதோ ஜகதோத்தாரணி நஹுதோ*
*பாரி பாரிகே நின்ன பாத சுவாரிஜங்கள ஸேரித பக்தர*
*கோர துரிதவ தூரகைசுவ மாரஜனக அபாரமஹிமனெ!!''*

தீரன், ஜகதோத்தாரணன் நீ, உம்மை இடைவிடாமல் எக் காலத்திலும் உம் திருவடியைப் பற்றிக் கொண்டு வழிபடக்கூடிய பக்தர்களின் தீராத் துன்பங்களை நீக்கக் கூடிய மஹிமை பெற்ற நாராயணன் நீ என்று கூறுகின்றார்.

*''தன்ய நீ நஹுதோ! சுரமுனி மான்ய நீ நஹுதோ''*
*பன்னகாரி வாஹன்ன தரே யோளு*
*இன்னுநி நகெ துர்காரு காணெனோ, ப்ர*
*சன்ன நாகெலோ பின்னஹகேளு*
*ப்ரபன்ன வத்சல ஸ்ரீஹயவதன!''*

நன்றி கூறும் வகையில் உயர்ந்தவன், தெய்வ சம்பந்தப்பட்ட முனிவர் நீ! கருட வாகனத்தையுடையவன், உமக்கு எதிராக இவ்வுலகில் யாரும் நிற்க முடியாது ஆகையால் என் பிரார்த்த னையை சாந்தமாகக் கேட்டு அருள்புரிவாயாக!

தொடரும்...

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## ஜனவரி 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## பிப்ரவரி 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | | | | | | |

## மார்ச் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |



### ஜனவரி 2021

01 ஆங்கில வருட பிறப்பு
06–12 ஆண்டாள் நீராட்டோத்ஸவம்
13 போகி, போகித்தேர்
14 மகர சங்கராந்தி–பொங்கல்
15 மாட்டுப்பொங்கல்,
ஆண்டாள் பரிணயோத்ஸவம்
26 இந்தியக் குடியரசு தினம்
28 ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி

### பிப்ரவரி 2021

11 ஸ்ரீபுரந்தரதாசர் ஆராதனை
13–21 தேவுனிகடப ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர
ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
19 இரத சப்தமி, பீஷ்மாஷ்டமி
20–26 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி
தெப்போத்ஸவம்
23 பீஷ்ம ஏகாதசி
27 குமாரதார தீர்த்த முக்கோட்டி

### மார்ச் 2021

02–10 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர
ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
4–13 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
11 மஹாசிவராத்ரி
13–21 திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
20–28 தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி
பிரம்மோத்ஸவம்
24–28 திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம்
28 ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தும்புரு தீர்த்த முக்கோட்டி

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஏப்ரல் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

## மே 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

## ஜுன் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### ஏப்ரல் 2021

08 அன்னமய்யா நினைவு நாள்
13 தெலுங்கு வருட பிறப்பு (ஸ்ரீபிளவ நாமம்)
14 ஸ்ரீமத்ஸ்ய ஜெயந்தி, தமிழ் வருட பிறப்பு
16–24 வாயல்பாடு ஸ்ரீபட்டாபிராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம், 18 இராமாநுஜ ஜெயந்தி
19 ஸ்ரீராம ஜெயந்தி, 21 ஸ்ரீராமநவமி
21–29 ஒண்டிமிட்டா ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
24–26 திருமலையப்ப ஸ்வாமி வஸந்தோத்ஸவம்
26–மே4 நாகுலாபுரம் ஸ்ரீவேதநாராயணஸ்வாமி பிரம்மோத்ஸவம்

### மே 2021

14 பரசுராம ஜெயந்தி, அக்ஷய திருதியை
17 சங்கர ஜெயந்தி
18 திருப்பதி ஸ்ரீகங்கை அம்மன் சித்திரைத் திருவிழா
18–26 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
20–22 திருமலை ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாச பரிணயம்
23–31 ரிஷிகேஷ்/நாராயணவனம் ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
24–27 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் வஸந்தோத்ஸவம்
25 ஸ்ரீநரசிம்ம ஜெயந்தி, தரிகொண்ட வெங்கமாம்பா ஜெயந்தி, அன்னமய்யா ஜெயந்தி,26 ஸ்ரீகூர்ம ஜெயந்தி

### ஜுன் 2021

02–10 கார்வேடி நகரம் ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
04 ஹனுமத் ஜெயந்தி
19–27 அப்பளாயகுண்ட்டா ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
20–24 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் தெப்போத்ஸவம்
22–24 திருமலையப்ப ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்
29–ஜுலை01 திருச்சானூர் ஸ்ரீசுந்தரராஜ ஸ்வாமி அவதாரோத்ஸவம்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## ஜூலை 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## ஆகஸ்ட் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

## செப்டம்பர் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### ஜூலை 2021

13-15 ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி சாக்ஷாத்கார மஹோத்ஸவம்

20-23 திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

16 திருமலையப்ப ஸ்வாமி ஆனிவர ஆஸ்தானம்

19-21 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஜ்யேஷ்டாபிஷேகம்

24 ஆஷாட பௌர்ணமி, வியாச ஜெயந்தி, குருபௌர்ணமி

### ஆகஸ்ட் 2021

08 ஸ்ரீசக்ரத்தாழ்வார் திருநட்சத்திரம்

11 ஆண்டாள் திருநட்சத்திரம்-திருவாடிப்பூரம்

12 நாகசதுர்த்தி, 13 கருட பஞ்சமி

15 இந்திய சுதந்திர தினம்

16 மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா நினைவு தினம்

17-20 திருமலையப்ப ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

20 வரலக்ஷ்மி விரதம்

22 ஹயக்ரீவ ஜெயந்தி, ஸ்ரீவிகனச ஜெயந்தி

23 காயத்ரி ஜபம்

30 ஸ்ரீகிருஷ்ண ஜென்மாஷ்டமி, கோகுலாஷ்டமி

### செப்டம்பர் 2021

08 ஸ்ரீபலராம ஜெயந்தி

09 ஸ்ரீவராஹ ஜெயந்தி

10 விநாயகர் சதுர்த்தி

15-18 திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி பவித்ரோத்ஸவம்

17 ஸ்ரீவாமன ஜெயந்தி

18-21 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பவித்ரோத்ஸவம்

19 அனந்த பத்மநாப ஸ்வாமி விரதம்

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



## அக்டோபர் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

## நவம்பர் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | | | | |

## டிசம்பர் 2021

கோவிந்தா! கோவிந்தா!! கோவிந்தா! கோவிந்தா!!

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### அக்டோபர் 2021

06–15 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் நவராத்ரி உத்ஸவம்
07–15 திருமலையப்ப ஸ்வாமி பிரம்மோத்ஸவம்
11 திருமலையப்ப ஸ்வாமி கருட சேவை
12 சரஸ்வதி பூஜை
13 துர்காஷ்டமி
14 மஹாநவமி
15 விஜய தசமி

### நவம்பர் 2021

03 நரக சதுர்தசி
04 தீபாவளி அமாவாசை, ஸ்ரீகேதார கௌரி விரதம்
08 நாகுல சதுர்த்தி
11 திருமலையப்ப ஸ்வாமி புஷ்பயாகம்
16 கைசிக துவாதசி
30–டிச.8 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பிரம்மோத்ஸவம்

### டிசம்பர் 2021

02 ஸ்ரீதன்வந்தரி ஜெயந்தி
04 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் யானை வாகனம்
08 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் பஞ்சமி தீர்த்தம்
09 திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி தாயார் புஷ்பயாகம்
14 ஸ்ரீகீதா ஜெயந்தி
15 ஸ்ரீசக்ர தீர்த்த முக்கோட்டி
16 மார்கழி மாதம் ஆரம்பம்
18 ஸ்ரீதத்த ஜெயந்தி

# திருமழிசையாழ்வார் போற்றும் திருவேங்கடம்

- திரு. மீ. சீனிவாசன், பரமக்குடி,
94425 78467

இறைவனின் கல்யாண குணங்களில் ஆழங்கால் பட்டவர் திருமழிசை ஆழ்வார். ஆழங்கால் படுவது என்பது ஆராய்ந்து உணர முடியாத இறைவனை, அவனது குணங்களான அவனருளால் அறிந்து அனுபவிக்கும் ஞானமாகும். இவ்வாறு இறைவனின் குணங்களில் ஆழங்கால் பட்டு பக்தி நெறியில் நிலைத்து நின்றவரே திருமழிசையாழ்வார் ஆவார். இவ்வுண்மையை இவரது திருவேங்கடப் பாசுரங்களால் அறியலாம்!

திருவேங்கடம், திருமலை எனப் போற்றப்படும் ஆதி வராஹ க்ஷேத்திரம் திருப்பதி. இங்குள்ள திருமால் வல்வினைகளைத் தீர்ப்பவன்! பக்தர்கள் எந்நேரமும் "கோவிந்தா! கோவிந்தா!" என்னும் கோஷத்துடன் பக்தியில் திளைத்து நிற்கும் தலமிது! வேங்கடம் என்றாலே பாவங்களைச் சுட்டெரிப்பது என்பது பொருளாகும்! பத்து ஆழ்வார்கள் பாடிப் பரவிய தலம்! இத்தலப் பெருமானைக் காணவருமாறு திருமழிசையாழ்வார் நான்முகன் திருவந்தாதியில் அழைக்கிறார்!



"மழைக் காலத்தில் பெரிய அருவிகள் இரத்தினங்களின் ஒளியைக் கண்டு கொள்ளிக் கட்டையோ என யானையும், மின்னல் என்று பாம்பும், அஞ்சி ஒதுங்கும் படியான திருமலையில் உள்ள எம்பிரானைச் செல்வம், போகங்களை அடைவதற்காக நான் அழைக்கவில்லை. ஞானிகளைப் போல மோக்ஷத்தை அடைவதற்கும் நான் அழைக்கவில்லை. அவனைக் கண்ணால் கண்டு அநுபவிக்கவே நான் அழைக்கிறேன். திருவேங்கட மலையைக் கூடுவதற்காகக் கூடலிழைப்பேன்!" என்று பாடுகிறார் திருமழிசையாழ்வார். இதற்குக் கூடல் இழைத்தல் என்று பெயர்.

"வட்டமாகக் கோட்டைக் கீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக் கூட்டினால் இரட்டைப் பட்டால் கூடுகையாம்! ஒற்றைப் படையாயின் கூடாமையாகும்!" இத்தகைய கூடல் இழைக்கும் பாசுரம் இதோ:

*"அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண*
*இழைப்பன் திருக்கூடல் கூட - மழைப்பே*
*ரருவி மணி வரன்றி வந்திழிய யானை*
*வெருவி அரவொடுங்கும் வெற்பு!"* – நான்முகன் திருவந்தாதி:39

தான் செய்த காரியம் மிகச் சிறியது. பெற்ற பயனோ மிகப் பெரிதாம் என வியந்து நிற்கிறார் திருமழிசை யாழ்வார். அதாவது திருவேங்கடத்தானை அழைத்தா ராம். அதனால் பெற்ற பலன் மிகப் பெரிதாம்.

இவ்வாழ்வார் சிறப்பாக ஒருவழிபாடும் செய்ய வில்லை. கொச்சி மலை, குடகு மலை, இமயமலை என்று மலைத் தொடர்களின் பெயர்களைச் சொல்லி வருகையில் தற்செயலாக அவரையும் அறியாமல் திருவேங்கடமலை என்று சொல்லி வைத்தார். அதாவது வெற்பென்று வேங்கடம் பாடினார். ஆனால், எம்பெருமானோ ஆழ்வார் திருவேங்கடத்தைப் பாடிய தாகக் கணக்கிட்டு வைத்தான். எனவே ஆழ்வாரும் திருவேங்கடம் பாடியவராகி விட்டாராம். பெரிய தவங் களைச் செய்தவர்களும் அடைய அரிதாகிய மோக்ஷ மாகிய உறுதிப் பொருளைத் தனக்காக்கிக் கொண்டு விட்டாராம் அக்கணத்தில்.

"ஓர் உத்தியாக மட்டும் வேங்கடமலை எனச் சொல்லி வைத்தேன்! பெற்ற பலனோ மிகப் பெரிது! இது எப்படிக் கூடியது என்று தீவிரமாக மனத்தை நிலை நிறுத்தி ஆராய்கிறேன்" என்கிறார் ஆழ்வார். இப்படி ஆராய்ந்தமையால் அது பிராட்டி பெருமான் ஆகியோ ரின் கருணையினால் நிகழ்ந்தது என்பதையறிந்து அவர்களிடத்தே ஈடுபட்டு நிற்கிறார் திருமழிசையாழ்வார்.

"வேதங்களாகிற சாஸ்திர வலையில் அகப்பட்டு, வெளிவர ஒண்ணாதபடி கிடக்கும், இலட்சுமி நாராயணனைப் போலவே, நான் அலர்மேல் மங்கையின் திருநாயகனாகிய திருவேங்கடமுடையானின் அடிக்கீழ் அமர்ந்து புகுந்து அடியீர் வாழ்மின்!" என்கிறபடி, "திருவடிகளாகிற வலையில் அகப்பட்டு மற்றொன்றுக்கு உரித்தாகாதபடி நின்றேன்! என் மனமே! நீயும் அதில் ஆட்பட்டு நிலைத்து நில்!" எனத் தன் மனத்திற்குத் திருமழிசையாழ்வார் கட்டளையிடும் பாசுரம் இதோ.

*"வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி*
*நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன் - கற்கின்ற*
*நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்*
*கால் வலையில் பட்டிருந்தேன் காண்!"*

– நான்முகன் திருவந்தாதி:40

தன்னுள்ளத்தில் அந்தர்யாமியாய் திருமால் நிற்கும் நிலையை விட, திருவேங்கட மலையில் நிற்கும் நிலை மிகச் சிறப்புடையதாகையால் அங்குச் சென்று காண ஆசைப்படுவதைக் கூறுவதாகத் திருமலையின் பெருமை யைப் பேசுகிறார் ஆழ்வார். திருமால் திருமலையை விட்டு இவர் உள்ளத்திற்கு வர ஆசைப்படுவது போல, இவர் தம் உள்ளத்திருப்பை விட்டுத் திருமாலை திருமலையில் காண ஆசைப்படுகிறார்.

"கல் என்று ஒலிக்கும் அருவியில் இரத்தினக் கற் களும், முத்தும் சிதறி வீழ்கின்றன. திருவோண விழாவில் பல்லாண்டு பாடும் பக்தர்களின் ஒலி மிகுதியாக முழங்கு கின்றன. இப்பேரொலி கல்லையும் உருக்கிக் கண்ணீரை வரவழைப்பதாக உள்ளது. இப்படி விழாக்கோலம் பூண்டிருக்கும் திருமலையை பக்தர்கள் தாம் பெற்ற பேறு என நினைத்து வரும்படியான திருவேங்கட மலை அப்பனே! என் மீது விருப்பங்கொண்டவனே! திருவேங் கட மலையில் எப்போதும் இருக்கும் நீ, என் மனம் கண்டு, அம்மலையை விடுத்து என்னுளே புகுந்தாய்! நானோ என் மனத்தைக் காட்டிலும் மிகச் சிறப்பான திருவேங்கட மலையிலேயே உன்னைக் காண ஆசைப்படுகின்றேன்!"

என் மனம் பாவங்கள் உற்பத்தியாகும் இடம். ஆனால், திருவேங்கடமோ நம் பாவங்களைப் போக்கு மிடம். இரத்தம் அருவி போல் சொரியும் அழுக்குப் படிந் தது என் கல் நெஞ்சம். கல்லும் உருகிக் கண்ணீர் முத்து களைப் பொழியும் இடம் திருவேங்கடம். பல்லாண்டு பாடுவோர் என் மனத்தை நெருங்க முடியாது. திருவேங் கடத்தில் திருவோண விழாவில் பல்லாண்டு பாடுவோர் பாடும் ஒலி பெருகியிருக்கும்.

வாத்சல்ய குணம் ஒன்று மட்டுமே அந்தர்யாமி நிலையில் பிரகாசிக்கும். திருவேங்கட மலையிலோ, பரத்வம், சௌலப்யம், சௌசீல்யம், வாத்சல்யம் முத லிய அனைத்து கல்யாண குணங்களும், வானரர், நரர், அயர்வறும் அமரர்களோடு வாசியற அனைவருக்கும் வெளிப்பட்டு நிற்கும் திருவேங்கடம்! எனவே நான் திருவேங்கட மலையில் உன்னைக் காண விரும்புகி றேன்!" என ஆழ்வார் பாடும் பாசுரம் இது.

*"காண லுறுகின்றேன் கல்லருவி முத்துதிர*
*ஓண விழவி லொலியதிர - பேணி*
*வரு வேங்கடவா! என்னுள்ளம் புகுந்தாய்*
*திருவேங்கட மதனைச் சென்று!"*

– நான்முகன் திருவந்தாதி:41

தொடரும்...



# ஆண்டாள் பெற்றது போல நல்ல கணவனைப் பெற வேண்டும்

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963

கன்னிகாதானம் தருகின்றபோது ந மம– அதாவது இது இனி என்னுடையது அல்ல என்ற பதத்தை உபயோகப்படுத்துவது கிடையாது என்று சென்ற இதழில் பார்த்தோம்.

அதற்கான காரணம் என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த ஒரு பொருளையும் தானம் தந்துவிட்டால் அந்தப் பொருளுக்கும், தானம் தந்தவருக்கும் எந்த உரிமையும் உறவும் கிடையாது.

ஒரு முறை நஞ்சீயர் என்கிற ஆசாரியர், தன்னுடைய சொத்தை மூன்று பகுதியாகப் பிரித்து, அதன் ஒரு பகுதியை, தன்னுடைய ஆசாரியரான பராசரபட்டரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஆசையில் திருவரங்கத்திற்கு வந்தாராம்.

செல்வத்தை எல்லாம் சிறிய மூட்டையாகக் கட்டி பராசரபட்டர் திருவடியில் வைத்தார்.

“இது என்ன” என்பது போல் அவர் நஞ்சீயரைக் கேட்க, “இது அடியேன் காணிக்கை” என்றாராம் அவர். அப்படிச் சொல்லிவிட்டு அந்த மூட்டையை பிரித்துக் காண்பித்தார். அதில் ஏராளமான நகைகள், காசுகள் இருந்தன.

அப்போது பராசர பட்டர் வறுமையில்தான் இருந்தார். ஆயினும் சீடன் சமர்ப்பித்த காணிக்கையில் அவர் மனம் செல்லவில்லை.

“இது எதற்கு எனக்கு... இதை கொண்டு போய் காவிரிக் கரையிலே கொட்டு” என்று அவர் சொன்ன உடனே, நஞ்சீயர் மறு வார்த்தைப் பேசாது அப்படியே கட்டிக் கொண்டு கிளம்பி விட்டாராம்.

உடனே, பராசரபட்டர் அவரைத் தடுத்து, “உன்னுடைய வைராக்கியம் என்னைக் கவர்ந்தது. நீ காணிக்கையாகத் தந்த பொருளின் மீது உனக்கு எந்த பற்றும் இல்லை என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே, நீ தந்த காணிக்கையை வைத்துக்கொண்டு ஒரு நந்தவனம் அமைத்து விடு. திருவரங்க நாதனுக்கு புஷ்ப கைங்கரியம் செய்து வா” என்று சொல்ல, அப்படியே ஒரு நந்தவனம் அமைத்தார் என்று, குரு பரம்பரையில் வருகிறது.

இதைப் போலவே இன்னொரு சம்பவமும் உண்டு. வைணவ மரபில் கோவிந்தன் என்று ஒரு ஆசாரியர். அவரும் ஸ்ரீமத்ராமாநுஜரும் உறவினர்கள். இருவரும் யாதவப் பிரகாசரிடம் கல்வி பயிலும் போது காளஹஸ்திக்கு சைவ மதம் தழுவிச் சென்று விடுகிறார். அவரை வைணவ மரபுக்குத் திருப்பிக் கொண்டு வர வேண்டும் என்று இராமாநுஜர் தன்னுடைய தாய் மாமனான பெரிய திருமலை நம்பிகளிடம் விண்ணப்பிக்கிறார்.




## கீதையின் பொன் மொழிகள்

- **தேவையிருக்கும் நல்லோர்களுக்குப் பயன் கருதாமல் திருப்தியோடு தானம் செய்.**
- **கண்ணன் திருவடிகளே சரணம் என்று பற்று; அவன் நம் எல்லாப் பாபங்களையும் தொலைப்பான்; கவலைப்படாதே.**
- **கண்ணனும் அர்ஜுனனும் இருக்கும் இடத்தில் வெற்றி நிச்சயம் என்று உறுதியோடு எழு; செயலாற்று.**

அவரும் ஏற்றுக்கொண்டு கோவிந்தனை திருத்திப் பணி கொண்டு திருப்பதிக்கு அழைத்து வந்து தன்னோடு வைத்துக் கொள்கிறார்.

கோவிந்தனுக்கு பெரிய திருமலை நம்பிகளிடம் எல்லையற்ற அன்பு, பெரிய திருமலை நம்பிக்கும் அவருடைய இல்லத்தரசிக்கும் கோவிந்தனிடத்திலே அபாரமானப் பிரியம்.

ஒரு முறை இராமாநுஜர் இராமாயண ரகசியம் கேட்க (இராமாயணக்கதையல்ல... இராமாயணத் தத்துவம்) பெரிய நம்பிகளிடம் வருகிறார். ஒரு வருட காலம் பாடங்களை எல்லாம் கேட்கிறார். அப்போது இராமாநுஜர் வைணவ தலைமைப் பீடத்தில் இருக்கிறார்.

அவர் விடை கொள்ளும்பொழுது, பெரிய திருமலை நம்பிகள், "அடியேனிடத்தில் ஏதேனும் பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று இராமாநுஜரிடத்திலே கேட்கின்ற பொழுது, இராமாநுஜர் "அப்படியாயின் கோவிந்தனை நம்மோடு அனுப்புக" என்று கேட்க, கோவிந்தனை இராமாநுஜருடன் அனுப்புகிறார் பெரிய திருமலை நம்பிகள்.

ஆனால் கோவிந்தனுக்கு பெரிய திருமலை நம்பிகளை விட்டுப் பிரிவதில் மனமில்லை. இருந்தாலும் வேறு வழியில்லாமல் இராமாநுஜருடன் வருகின்றார். அவர் விருப்பமின்றி தன்னுடன் வருவதையும், அவருடைய மனம் முழுக்க பெரிய திருமலை நம்பியைப் பிரிந்த வருத்தத்திலேயே இருப்பதையும் அறிந்த இராமாநுஜர், "நீர் வேண்டுமானாலும் பெரிய திருமலை நம்பிகளிடத்திலே திரும்பப் போயிரும்" என்று சொல்லி அனுப்பி விடுகின்றார்.

அவரும் மகிழ்ச்சியோடு பெரிய திருமலை நம்பிகள் வீட்டிலே போய் கதவைத் தட்டுகின்றார். பெரிய திருமலை நம்பிகள் துணைவியார் கதவைத் திறந்து "நம் கோவிந்தன் நம்மோடு வந்து விட்டான். பாவம், பிள்ளை பசியோடு இருக்கும்... போய் பிரசாதம் கொண்டு வருகிறேன்" என்று சொல்ல, பெரிய திருமலை நம்பிகள் கடுமையாகச் சொல்லுகின்றார்.

"விற்ற மாட்டை வீட்டில் சேர்ப்பார் உண்டோ... அதற்கு புல்லிடுவார் உண்டோ... தானம் கொடுத்த பொருளை திரும்ப வாங்குவார் உண்டோ... இனி அவன் நமக்கு உரியவன் அன்று... அவனைப் போகச் சொல். உள்ளே சேர்க்காதே" என்று கடுமையாகக் கட்டளையிடுகின்றார்.

வேறு வழியின்றி கோவிந்தன் திரும்ப இராமாநுஜருடன் வந்து சேர்கிறார். கொஞ்ச காலத்தில் இராமாநுஜரை விட்டுப் பிரியாத அளவுக்கு அவரோடு அன்பு கொண்டு இணைந்து விடுகிறார்.

கோவிந்தனிடம் இராமாநுஜரின் அத்தனை குணச் சிறப்புகளும் இருப்பதால் இராமாநுஜர் எம்பெருமானார் என்று பட்டப் பெயரிட்டு அழைக்க, இரண்டு எம்பெருமானார்கள் இருப்பது தகாது என்று கருதி தம்முடைய பெயரை எம்பார் என்று சுருக்கிக் கொள்கிறார்.

இதன் மூலம் தெரிவது ஒருவருக்குத் தானம் அளித்து விட்டால், அதனை எக்காரணத்தை முன்னிட்டும் திரும்பப் பெறக்கூடாது என்பது சாத்திரம்.

ஆனால், கன்னிகாதானத்தில் இந்த நிபந்தனை எதுவும் கிடையாது. அதனால்தான் தானம் கொடுக்கும் போது கடைசியிலே ந மம என்ற வார்த்தைகளை உபயோகப்படுத்துவது கிடையாது. கன்னிகாதானம் கொடுத்த பின்பும், விரும்பும்போது தன்னுடைய தாய் வீட்டிற்கு மறுபடி வருவதற்கும், சில நாட்கள்

இருப்பதற்கும், பெண்ணுக்கு முழு உரிமை உண்டு என்பதைக் காட்டுவது கன்னிகாதானத்தின் மிகப் பெரிய சிறப்பு. தானம் கொடுத்தவருக்கும் பெற்றவருக்கும் ஒரு சேர புகழைக் கொடுப்பது கன்னிகாதானம்.

கன்னிகாதானத்திற்குப் பின் ஒரு பெண்ணுக்குக் கோத்திரம் மாறினாலும் பிறந்த வீட்டு உறவும் உரிமையும் மாறுவதில்லை என்பதே சாத்திரம்.


தான் பெருமானோடு இணைந்த மணவாழ்வை பூரணமாக வாரணமாயிரம் பதிகம் பாடிச் சொன்ன ஆண்டாள், திருமணம் முடிந்த நிறைவுப் பாசுரத்திலும், தன்னை "வேயர் புத்தூர் கோன் கோதைச் சொல்" என்றே சொல்லிக் கொள்கின்றாள்.

அரங்கனுடன் ஐக்கியமான ஆண்டாளை, இன்றளவும் பெரியாழ்வார் உறவிட்டுப் பேசுவதுதானே வைணவ மரபு.

இந்த இடத்திலே ஆண்டாளின் திருக்கல்யாணத்தை நினைத்துக் கொள்வது மிகவும் சிறப்பானது. நாம் தெய்வத் திருமணங்களைப் பேசுகின்ற பொழுது, சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம் என்றெல்லாம் பெருமையாகப் பேசுகின்றோம்.

ஆனால், ஆண்டாள் கல்யாணத்துக்கு உள்ள ஏற்றம், ருக்மணி கல்யாணத்திற்கோ, சீதா கல்யாணத்திற்கோ இல்லை. காரணம், பகவான் இராமனாக அவதரித்தபோது, பிராட்டி சீதையாக அவதரித்தாள். இருவருமே விபவ அவதாரத்தில் திருமணம் செய்து கொண்டனர்.





அதைப்போலவே, பகவான் கண்ணனாக அவதரித்த பொழுது, பிராட்டி ருக்மணியாக அவதரித்தாள். அவர்கள் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

ஆனால், பூமிப் பிராட்டி ஆண்டாளாக அவதரித்த பொழுது, பகவான் எந்த அவதாரமும் எடுக்க வில்லை. அர்ச்சாவதார கோலத்தில் அரங்க நாதனாகப் பள்ளி கொண்டு இருந்தான். அந்த அரங்கனை ஆண்டாள் காதலித்தாள்.

*"கண்ணாலங் கோடித்து கன்னி தன்னைக் கைப் பிடிப்பான்*
*திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசு அழிந்து*
*அண்ணாந்து இருக்கவே ஆங்கு அவளைக் கைப்பிடித்த*
*பெண்ணாளன் பேணும் ஊர் பேரும் திரு அரங்கமே"*

–நாச்சியார் திருமொழி 11.9

மன உறுதியால், அர்ச்சாவதாரத்தை அசைத்து, தன்னைத் திருமணம் செய்து கொள்ள வைத்தாள். படுத்துக் கொண்டிருந்த எம்பெருமானைத் தட்டி எழுப்பி, திருமணம் செய்து கொண்டாள்.

உயர்ந்த கணவரைப் பெறுவதில், பெண்களுக்கு உள்ள மன உறுதியும், பிரார்த்தனையும், வைராக்கியமும் இதில் அடங்கியுள்ளது.

அருளிச்செயல் தொடரும்...

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

பெரிய பெருமாள் வாழித்திருநாமம் தொடர்ச்சி...

(பெரியபெருமாள் எங்கள் பிரான் அடிகள்) பெரிய பெருமாள் – மூலவர். நம்பெருமாள் – அழகிய மணவாளன் – உற்சவர். ஆழ்வார்கள் பதின்மராலும், ஆண்டாளாலும் 247 பாசுரங்களால் மங்களா சாசனம் செய்யப்பெற்ற திவ்யதேசம் ஸ்ரீரங்கமாகும். ஸ்ரீரங்கத்தில் கோயில் பெரிய கோயில், மதிள் பெரிய மதிள், பிராட்டியார் பெரிய பிராட்டியார். பெண் கொடுத்த ஆழ்வார் பெரியாழ்வார், மண்டபம் பெரிய திருமண்டபம், திருநாள் பெரிய திருநாள், திருப்பாவடை – பெரிய திருப்பாவாடை, ஆசார்யர் மணவாளமாமுனிகளான பெரிய ஜீயர், எனவே பெருமாள் பெரிய பெருமாளானார்.

இந்த திவ்யதேச எம்பெருமானான பெரிய பெருமாள் வைபவம் புராணங்களில் பேசப்பட்டுள்ளன. சூர்ய வம்சத்தில் அயோத்யையை ஆண்டு வந்த இக்ஷுவாகு மன்னன், நான்முகனால் சத்ய லோகத்தில் திருவாராதனம் செய்து வந்த ஸ்ரீரங்க விமானத்தைப் பெற்றுக் கொண்டான். அயோத்திக்கு வந்தான். அயோத்யையின் வடகரையில் சுமார் 3500அடி தூரத்தில் ஸரயூ மற்றும் தபஸா நதிகளின் நடுவில் அயோத்யை நகரத்தைப் பார்க்கும் விதமாக சுப நேரத்தில் சாஸ்த்ரங்களில் கூறியபடி பிரதிஷ்டை செய்தான். பங்குனி மாதம் ரோகிணி நக்ஷத்ரத்தில் பிரம்மோத்ஸவத்தை மிகவும் நேர்த்தியாகத் தன் புத்ரர்கள் பேரன்கள் புடைசூழ நடத்தினான் என்று பிரம்மாண்ட புராணத்தில் ஸ்ரீரங்க மஹாத்மியத்தில் எட்டாவது அத்யாயத்தில் (3–7 சுலோகங்கள்) கூறப் பட்டுள்ளது. இதனை அறியும் வகையில் இன்றும் திருவரங்கத்தில் பங்குனி ரோகிணி அன்று ஆதி பிரம்மோற்சவம் ஆரம்பமாகிக் கொண்டாடப் படுகிறது அறியலாம். உற்சவர் நம்பெருமாள் அழகியமணவாளன். *"சைத்ரே ரேவதி ஸஞ்ஜாதம் ஸௌம்யஜாமாதரம் ப்ரபும்"* என்கிறபடியே சித்திரை ரேவதியில் அவதரித்தவர் நம்பெருமாள் என்னும் அழகியமணவாளர் ஆவர்.

அவ்வாறே தர்மவர்மன் அரசனாய் இருந்த போது விபீஷணனால் கொண்டு வரப்பட்ட ஸ்ரீரங்க நாதனோடு கூடிய ஸ்ரீரங்கவிமானம் பங்குனி மாதம், சுக்ல பக்ஷம், ரோகிணி நக்ஷத்ரம் ஞாயிற்றுக்கிழமை அன்று சுபமான லக்னத்தில் காவிரிக் கரையில் பிரதிஷ்டை செய்யப்பட்டது என்பதையும் அதே அத்யாயத்தில் (சுலோகம் 60) கூறப்பட்டுள்ளது அறியலாம். கலியுகத்தில், பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு காவிரி வெள்ளப்பெருக்கால் மணலில் புதையுண்ட ஸ்ரீரங்க விமானத்தை கிளிச்சோழன் என்னும் அரசன் மீண்டும் மேலே கொண்டு வந்து பல மண்டபங்கள் எழுப்புதல் முதலான கைங்கர்யம் செய்தான். இதனை அறியும் வகையில் இன்றும் சித்திரையில் விருப்பன் திருநாளாக பிரம்மோற



சவம் துவஜாரோஹணம் தொடங்கி ரேவதியில் ரதோற்சவம் காணும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது. இப்படி பெரிய பெருமாளும், உபய நாச்சிமார்களுடன் நம்பெருமாளும் அர்ச்சா மூர்த்தி யாய் எல்லாரும் உய்யும் பொருட்டு எழுந்தருளி இருக்கிறார்கள். இப்படி அடியார்கள் சேவிப்பதற் காக வந்து உதவி செய்தது பற்றி "பிரான்" என்கிறார்.

(எங்கள் பிரான் அடிகள்) இப்படிப்பட்ட பிரா னான திருவரங்கன் திருவடிகளைச் சரணமாகப் பற்றும் போது, திருமங்கையாழ்வார், *"ஆழி வண்ண நின்னடியிணை அடைந்தேன்", "எனக்கும் ஆதல் வேண்டும் என்று அடியிணை அடைந்தேன்", "உன் அடியனேனும் வந்து அடியிணை அடைந்தேன், அஞ்சி வந்து நின் அடியிணை அடைந்தேன்", "எனக்கும் ஆக வேண்டும் என்று அடியிணை அடைந்தேன்", "அன்ன மதாகும் என்று அடியிணை அடைந்தேன்", "ஆதலால் வந்து உன்னடியிணை அடைந்தேன்", "உலகமளந்த பொன்னடியே அடைந்து வந்தேன்"* (பெரிய திருமொழி 5–8) என்று ஒருகால் மட்டுமின்றி ஒன்ப தின்கால் திருவடிகளை வேண்டியது காணலாம்.

நம்மாழ்வாரும் பெரிய பெருமாளை *"முகில் வண்ணன் அடியை அடைந்து அருள் சூடி உய்ந்த வன்"* என்று அருளியது காண்க. திருவரங்கப் பெருமாள் அரையர் என்னும் ஆசார்யர் திருமாலைக்கு அருளிய தனியனில் *"கற்றினம் மேய்த்த கழலிணை"* என்கிற படியை, அடியாரைக் காப்பதற்கு உறுப்பாக மிகவும் எளிமையான திருவடி கள் என்றும் அந்தத் திருவடிகளுக்கு திருமாலை என்னும் பிரபந்தத்தை தொண்டரடிப்பொடியாழ் வார் பாடி திருவடிகளிலே சூட்டினார் என்றும் உரைப்பர் பிள்ளைலோகம் சீயர். இவ்வாழ்வார் அருளியபடியே *"குணதிசை பாதம் நீட்டி"* என்ப தற்குச் சேர எல்லா உலகங்களும் வாழ்ச்சி பெறுவ தற்கு இழியும் துறையான திருவடிகளைக் கிழக்கு திக்கு வாழும்படியாக நீட்டி உள்ளான் என்பர் திருப் பாணாழ்வாரும். "திருக்கமலபாதம்" என்பதற்குச் சேர பிராட்டிமார் திருமுலைத் தடங்களிலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொள்ளும் திருவடிகள் என்பர் பெரிய வாச்சான்பிள்ளை. அழகிய மண வாளப்பெருமாள் நாயனாரும் இந்தத் தொடருக்குப்



பெரிய பெருமாள் திருவடியானது பெருங்காற்றிலே இழிவார் தெப்பம் கொண்டு இழியுமாபோலே, செவ்வி, குளிர்த்தி, மணம், விகாஸம் இவை அமைந்த ஒரு தாமரைப் பூவைப்போலே இருக்கும் திருவடிகள் என்கிறார்.

அந்தத் தாமரையானது சூரிய ஒளி பட்டு மலரும். பெரியபெருமாள் திருவடியானது அடியார் ஸந்நிதியிலே அலரும் தாமரையாய்த்து என்று சுவைபட உரைப்பர். வேதாந்த தேசிகரும் தாம் அருளிய முனிவாகன போகத்தில் நீர்மைக்கும் மேன்மைக்கும் எல்லையானவனான அரங்கன் திருவடியானது உபாயம் உபேயம் ஆகியவற்றில் உரைப்புண்டானவை என்று அநுபவிப்பர். திருவுக்கு லீலாகமலம் போலே இருக்கிற பாதம் என்றும் உரைப்பர். மேலும், *"தழுப்பரிய சந்தனங்கள் தடவரை வாயீர்த்துக்கொண்டு தெழிப்புடைய காவிரி வந்து அடி தொழும்"* என்று பெரியாழ்வார் அருளியதற்கு ஏற்ப, பெரிய மலையிடத்திலே வளர்ந்து, ஒருவரிருவரால் தழுவ அரிதாம்படி இருக்கிற சந்தன மரங்களை வேரோடே அகழ்ந்து இழுத்துக்கொண்டு "இத்தைக் கைக் கொண்டருள வேணும்" என்னுமாபோலே இருக்கிற முழங்கின ஒலியையுடைய காவிரியான வள் ஆதரத்தோடே வந்து, தான் கொண்டு வந்த சாத்துப்படியையும் பெரிய பெருமாளுக்கு சமர்ப் பித்துத் திருவடிகளை தொழுகிறாள் என்று சுவை யாக உரைப்பர் மாமுனிகள். இப்படி பிரானாய் உதவி செய்யும் பெரிய பெருமாள் திருவடிகளைப் *"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பல கோடி நூறாயிரம் மல்லாண்ட திண்தோள் மணி வண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு"* என்று வாழ்த்து வோமாக.

வாழித்திருநாமம் வளரும்...

# 108 திவ்விய தேச வைபவம்







## (நவத்திருப்பதி–9)

# திருக்குருகூர்

– திரு. உருப்பட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

எல்லா மஹரிஷிகளும் தவம் செய்ய, அவர்களுக்கு முன்பாக ஸ்ரீலக்ஷ்மி வராஹ மூர்த்தியாக பகவான் சேவை சாதித்த பெருமை இந்த க்ஷேத்ரத்துக்கு உண்டு.

மந்தன் என்கிற பிராமணன் சாளக்ராமத்தில் நல்ல ஆசார்யரை அடைந்திருந்தும், மந்த புத்தியுடன் இருந்ததால், ஆசார்யன் சபிக்க, அடுத்த பிறவியில் தாந்தன் என்கிற பெயரோடு இத்தலத்தில் பிறந்து கோயில் உழவாரப் பணி செய்து கிடக்கும் போது, இந்திரன், இந்த எம்பெருமானை சேவிக்க வந்தான். அப்போது, தாந்தனை கீழ்குலத்தவன் என்று ஏசி அப்புறப்படுத்த, தாந்தன் தாமிர வருணியின் வடகரைக்குச் சென்று அங்கு, எம்பெருமானை ஓரிடத்தில் நாட்டி வழிபட, பாகவத அபசாரத்தால் இந்திரனும் அவனுடன் வந்த தேவர்களும் கண்ணை இழக்க, பகவானால் கட்டளையிடப்பட்டு, தாந்தன் இருந்த இடம் சென்று வணங்கி கண்பார்வை மீண்டும் பெற்றனர். எம்பெருமானே, அந்த அப்பன் கோயிலுக்கு (தாந்தன் வழிபட்ட இடம்) நேரே சென்று அவனை பரமபதம் ஏற்றினார் என்பது வரலாறு.

சங்கன் என்பவர், இப்பெருமானையும் மற்ற தெய்வங்களைப் போலப்பாவித்து உயர் பதவியை அடைய தபஸ் செய்தபோது நாரதரால் திருத்தப்பட்டு, சங்கு வடிவில் சங்குமுனிவராகி கடலில் வாழ்ந்து, ஒவ்வொரு நாளும் தாமிரவருணி நதி – சங்கணித் துறைக்கு வந்து, துறை ஏறி, எம்பெருமானை சேவித்து, அருள் பெற்ற வரலாறும் உண்டு.

இந்திரன் பதவி, மது இவற்றில் மயங்கி, பெற்றவர் களான கச்யபர், அதிதி இருவராலும் சாபத்துக்கு ஆளாகி, வளமையை இழந்தான். பிறகு அவர்களின் கட்டளையின் பேரில் இந்த திவ்ய தேசத்துக்கு வந்து, எம்பெருமானைத் துதித்து, இழந்த இளமையையும், வளத்தையும் பெற்றான் என்பர்.

பிரம்மா, பகவானை வழிபட ஏற்ற இடம் காட்ட வேண்டும் என்று பகவானையே வேண்ட, பகவான், இத்தலத்திற்குப் போய் என்னை வழிபடு என்று சொன்னதாகவும் குருகாத்ரமதர்ச்சனம் என்று அருளியதால், இது குருகூர் ஆயிற்று என்றும் சொல்வர். பிரமன், பகவானை இத்தலத்திலேயே எழுந்தருளி அருள்பாலிக்குமாறு வேண்டியபோது, பகவான்

*க்ருதேத்தி ஸ்ஊுர்பகவான், த்ரேதாயாம்ரகு நந்தன: |*
*த்வாபரேநந்த ஸ்ஊுச்ச கலோதேவ: பராங்குச: ||*

என்பதாக, அதாவது, க்ருத யுகத்தில் அத்ரியின் புத்ரனாகவும், த்ரேதாயுகத்தில் ஸ்ரீராமனாகவும், த்வாபர யுகத்தில் கண்ணனாகவும், கலியுகத்தில் மாறன் சடகோப னாகவும் அவதரிக்க இருப்பதாக திருவாய் மலர்ந்தாராம்.

### இது-ஆழ்வார் திருநகரி

நவத்திருப்பதி மான்மியம் இவ் வாறு கூறுகிறது. இராமாயணம் – ஸ்ரீராமபிரானும் எமதர்மனும் – ஏகாந்தமாகப் பேசும்போது ஒருவ ரையும் உள்ளே அனுப்பாதே – அனுமதிக்காதே என்று லக்ஷ்மண னுக்கு, ஸ்ரீராமனால் கட்டளையிடப் பட்டது. லக்ஷ்மணன் வாயிலிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கி றான். அப்போது துர்வாசர் வரு கிறார். அவரது கோபத்துக்கு அஞ்சி, அவரை உள்ளே போக அனுமதிக்கிறான். துர்வாசர், எம தர்மன் இருவரும் சென்றபிறகு, ஸ்ரீராமபிரான் லக்ஷ்மணனிடத்தில் – சரயூ நதிக்கரையில், அடுத்த கலி யுகத்தில் வராக க்ஷேத்ரமாகிய திருக்குருகூர் தேசத்தில் மரமாகப் பிறப்பாய் – அப்போது அந்த மர நிழலுக்கு நானும் வருவேன் என்கிறார்.

கலி வந்தது. திருக்குருகூர் காரியார் – திருவண்பதி சாரமாது – உடைய நங்கைக்கும் திருமணம் ஆகிறது. திருவண்பதிசாரத்திலி ருந்து, திருக்குருகூர் திரும்பும் வழியில் இரு வரும் திருக்குறுங்குடி நம்பியை சேவிக்கிறார்கள். “நாமே உமக்குக் குழந்தையாக வரு வோம்” என்கிற அருளாசியுடன் திருக்குருகூர் வந்தவர்களுக்கு அப் படியே திருக்குறுங்குடி நம்பியே, அழகிய ஆண்மகனாகப் பிறக்கிறார். உலகத்து குழந்தைகட்கு எல் லாம் மாறுபட்ட தன்மையோடு இருந்ததால் மாறன் என்றும், பிறந்த உடனேயே சடம் என்கிற வாயுவை வெருட்டியதால் சடகோபன் என் றும் அழைக்கப்பட்டார்.

பேச்சு இல்லாமல், உணவு இல்லாமல் இருந்த குழந்தையை இங்கு ஆதிநாதன் திருவடிகளில், பெற்றோர் சேர்ப்பித்தனர். குழந்தை இங்கு தவழ்ந்தது. சுமார் 16 ஆண்டுகள் மோனத்தவ நிலை... உடல் வளர்ச்சி குன்றாத தவ நிலை... இவரது ஞானமும், தேஜஸ்ஸும் வடக்கே அயோத்திக்குச் சென்று இருந்த, மதுரகவி களை இவர்பால் ஈர்த்தது. மதுரகவிகள் இங்கு வருகிறார். தெண்டனி டுகிறார்.

உள்ளமும் உடலும் சிலிர்த்து, ஒன்ற, ஆழ்வார், திருக்கண் மலர்ந்து மதுரகவிகளைக் குளிர நோக்குகிறார். உடனே, நான்கு மறைகளும் தமிழில், நான்கு பிரபந்தங்களாக ஊற்றெடுத்துப் பெருகின. தேவர், தானவர் குழாம் வானில் நிறைந்தது.

திருப்புளி ஆழ்வாரின் (புளிய மரம்) இலைகளில், இலைக்கு ஒருவராக, எல்லா திவ்யதேசத்து எம்பெருமான்களும், தன்னைப் பாடமாட்டாரா, தன்னைப் பாடமாட்டாரா, தன்னைப் பாடமாட்டாரா

### வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 53க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | ச் | சி | று | பு | லி | யூ | ர் | ன் | | 2 தி |
| ரு | 3 ஸ்ரீ | ஹ | ய | க் | ரீ | வ | ர் | 4 ச | ண | | ரு |
| நா | | 5 பெ | ரு | ங் | கு | ள | ம் | ம் | ண் | | ம |
| ரா | தா | ணி | ல் | 6 ச | 7 ச | | று | பா | க | 22 சா | லை |
| ய | ஸ் | க | ம | ப் | ங் | | னா | தி | ணி | ர | வை |
| ண | சா | ங் | ம் | த | கு | | தி | | 8 க | ங் | யா |
| பு | ம | ர | ய | மி | ச | ஞ் | 9 ப | ட | ரு | 10 க | வு |
| ர | ர் | 11 கு | 12 பா | | க் | ன் | வ | ட | ண் | 13 பா | ர் |
| ம் | 14 த | லை | ப் | பா | க | ம் | | 15 ரோ | கி | ணி | |
| 16 ஸ்ரீ | ரு | த் | ர | ம் | ர | தா | வ | அ | ம | 17 ரா | |
| | 18 அ | கோ | பி | ல | ம் | | லி | மே | ன் | 19 நெ | |
| 20 தி | ரு | க் | கோ | ட் | டி | யூ | ர் | ல் | மா | ரு | 21 தி |

என்று, அங்கு வந்து குவிந்தனர். மதுரகவிகள் கண்ணிநுண் சிறுத்தாம்பு அருளினார். சடகோபன் என்கிற மாறனாகிய நம்மாழ்வார், தனது 35வது வயதில், தனது கருணை உருவத்தை உலகில் விட்டு, திருமோகூர் காளமேக எம்பெருமான் முன்னே செல்ல, ஆழ்வார் பரமபதம் அடைந்தார் என்பது குருபரம்பரை செய்தி.

மதுரகவிகள், துக்கித்தார். அரற்றினார். பிறகு ஒருவாறு தேறி, ஆழ்வாரைத் தியானித்து தாமிர வருணி நீரைக் காய்ச்சினார்.

இரண்டு விக்ரகங்கள் கிடைக்கப் பெற்றார். முதல் விக்ரகம் ஸ்ரீஉடையவர். இரண்டாவது விக்ரகம் ஸ்ரீநம்மாழ்வாரின் அருளும், இளமையும் ததும்பும் அர்ச்சா விக்ரகம். இவர்தான், திருமங்கை ஆழ்வாரால், அத்யயன உத்ஸவத்திற்கு (மார்கழி மாத பகல் பத்து –இராப்பத்து உத்ஸவம்) எழுந்தருளச் செய்யப்பட்டு, திருவரங்கன் முன்பு உத்ஸவ சமயத்தில் சேவை சாதித்தார். காலம் வேகமாகக் கழிந்தது. திருக்குடந்தைத் திருவாய்மொழிப் பாசுரம் தவிர, நாலாயிரமும் மறைந்தது. ஸ்ரீமந்நாத முனிகள், இங்கு திருக்குருகூர் என்கிற ஆழ்வார் திருநகரிக்கு வந்து மதுரகவிகள் வம்சத்து பராங்குச தாசர் அறிவுரைப்படி, கண்ணிநுண் சிறுத்தாம்பு பாசுரங்களைப் பக்தியுடன் 12000 முறை ஆவ்ருத்தி செய்து, அர்ச்சாவதாரத்தில் உள்ள ஆழ்வாரின் க்ருபையால், திரும்பவும் நாலாயிரம் பாசுரங்களையும் – திவ்ய பிரபந்தமாகப் பெற்று வைணவ உலகத்துக்கு வழங்கினார்.

இன்னொரு வரலாறும் உண்டு. ஸ்ரீஅஹோபில மடஸ்தாபகர் – ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் – யாத்ரையாக இங்கு எழுந்தருளிய போது, ஆழ்வாரை சேவிக்க இயலவில்லை. வேறு சமயத்தவர்கள் ஆழ்வாரை மலையில் உள்ள சுனையில் மறைத்து விட்டார்கள் என்று கேள்விப் பட்டு, தாங்கொணத் துயரத்துடன் ஸ்ரீமந்நாதமுனிகளைத் தியானித்து கண்ணிநுண் சிறுதாம்பு பாசுரங்களை ஆயிரம் முறை ஆவ்ருத்தி செய்ததாகவும் அப்போது அரசாண்ட அரசன் குலசேகர பாண்டியனின் உதவியுடன் நம்மாழ்வாரை – மலையின் குகைக்குச் சென்று, சுனை அருகே பார்த்தபோது



## கீதையின் பொன் மொழிகள்

- அனைவருக்குள்ளும் ஒரே பரமாத்மா இருப்பதால், ஆத்மாக்களுக்குள் விரோதமே கூடாது என்று அறி.
- ரஜோகுண தமோகுணத்தைக் கட்டுப்படுத்தி சத்வ குணத்தை வளர்ப்பாய்.
- சம்சாரமாகிற தீய தலைகீழ் அரசமரத்தை, பற்றின்மையாகிய கோடரியால் வெட்டு.
- சூரியன், சந்திரன், நெருப்பு ஆகியவை உட்பட எல்லாப் பொருட்களையும் ஆத்மாவே தன் அறிவாலே விளங்கச் செய்பவன் என்று உணர்.
- அதிகமான சூடு, காரம், உப்பு, துவர்ப்பு ஆகிய ராஜஸ உணவைத் தவிர்.
- கண்ணனே நம் வயிற்றில் இருந்து உணவை ஜீரணிக்கச் செய்பவன்; நமக்குள் நீக்கமற நிறைந்திருப்பவன் என்று உணர்.
- எல்லாவற்றையும் தாங்கி எதிலும் நிறைந்து, அனைத்தும் உடையவனானபடியால் கண்ணனே வேதங்களால் போற்றப்படும் புருஷோத்தமன் என்று அறி.
- வேதசாஸ்த்திரத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நடந்து தெய்வத் தன்மையை அடை.
- பயமின்மை, தயை, சகிப்புத்தன்மை, கோள் சொல்லாமை ஆகிய தெய்வத்தன்மைகளைக் கடைபிடி.

தொகுப்பு : டாக்டர் எஸ்.எல். ஸ்ரீநிவாசன், சத்ய மங்கலம், 97895 97008.

ஆழ்வார் தன்னைச் சுனையிலிருந்து வெளிப்படுத்தியதாகவும், ஜீயர் அஹோ பாக்யம் என்று சொல்லி, ஆழ்வாரை இறுகக் கட்டி அணைத்து எடுத்து வந்து மறுபடியும், சந்நதியில் சேர்த்ததாகவும், ஆதிநாதன் அகமகிழ்ந்து வண்சடகோபன் என்றும், தன் திருநாமத்தில் உள்ள ஆதி என் பதையும் இணைத்து ஆதிவண் சடகோபன் என்கிற திருப்பெயரை ஜீயருக்கு சூட்டியதாகவும், ஆழ்வாரே தான் அணிந்திருந்த ஹம்ஸ முத்ரையை ஜீயருக்கே அருளியதாகவும் இதிலிருந்து, ஸ்ரீமடத்தின் முத்ரை ஹம்ஸ முத்ரை ஆயிற்றென்றும் சொல்வர்.

### சிறப்புகள்

எங்கும் கலி சூழ்ந்து இருண்ட போது மகிழம்பூ மாலையுடன் ஞான ஒளி பிரகாசிக்க, நம்மாழ்வார், மதுரகவிகளுக்கு அருளிய திவ்ய தேசம். திருமங்கை ஆழ்வாரோ திவ்யதேசம் தோறும் சென்று மங்களா சாசனம் செய்தார். அந்தத் திவ்ய தேசத்து எம்பெருமான்கள், நம்மாழ்வாரின் மங்களாசாசனத்துக்காக, திருப்புளியமர இலைகளில், இலைக்கு ஒருவராகக் கிடந்தனர்.


### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம். ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :

**0877- 2233333, 2277777**


*"சிலைக்கோலநெற்றித் திருமாதுகேள்வர்*
*இலைக்கு ஒருவராக என்னைப்பாடு,*
*என்னைப்பாடு என்ன"*

–நம்மாழ்வார் தாலாட்டுப் பாசுரம்

இந்த எம்பெருமான், தானாகவே தோன்றியவர். ஸ்ரீஆதிநாதனின் திருவடிகள் – பூமிக்குள் உள்ளன. திருவடி சேவை சேவிக்க இயலாது.

நவத்திருப்பதிகளில் திருக்குருகூர் திவ்ய தேசம் தவிர, வேறு, திருப்பதிகளில் நம்மாழ்வாரின் உற்சவத் திருமேனி எழுந்தருளப் பண்ணவில்லை. வருடா வருடம் – வைகாசி விசாக நட்சத்திரத்தில் (நம்மாழ்வார் – அவதார திருநட்சத்திரம்) நவத் திருப்பதி – பெருமாள் – ஒவ்வொருவரும் கருட வாகனத்தில் எழுந்தருளுவதும், ஸ்ரீநம்மாழ்வார், அன்னவாகனத்தில், ஒவ்வொரு எம்பெருமானையும் மங்களா சாசனம் செய்வதும் இந்த அற்புத காணக்கிடைக்காத சேவையை அடியார்கள் ஒரு சேர சேவித்து மகிழ்வதும் – திருக்குருகூரில் தொடர்ந்து இப்போதும் நடைபெறுகிறது.

ஆழ்வாருக்கு, இத்திருத்தலத்தில் தினமும் திருமஞ்சனம் நடைபெறுகிறது. 35 ஆண்டுகள் நிறைவடையும்போது, இந்தப் புளிய மரத்துக்குகை, ஆழ்வாரின் சரமத்திருமேனியைத் தன்னிடம் பள்ளிப்படுத்தி, புனிதத்திலும் புனித இடமாகி, தூங்காப் புளியாகி, நாம் சேவிக்கும் பாக்யத்தைத் தந்து கொண்டிருக்கிறது.

ஆழ்வாரின் திருநாமத்துடன் விளங்கும் திவ்ய தேசம் இது ஒன்றுதான்.

*வைகுண்டநாத - விஜயாஸந - பூமிபால*
*தேவேச - பங்கஜ விலோசந - சோரநாட்யாந் ।*
*நிஷேபவித்த - மகராயத கர்ண பாசாந்*
*நாதம் நமாமி வகுளாபரணேன ஸார்த்தம் ।।*

ஒன்பது திவ்யதேசத்து எம்பெருமான்கள், ஸ்ரீநம்மாழ்வாரை ஒரு சேர தியானித்து நமஸ்கரிப்போம். (தினந்தோறும் இந்தத் தியான ச்லோகத்தை அநுசந்தித்தால், ஸ்ரீநம்மாழ்வாரின் கிருபையும் நவத்திருப்பதி எம்பெருமான்களின் அனுகிரகமும் தொடர்ந்து கவசம் போல் இருந்து காக்கும்)

| | | |
|---|---|---|
| பெருமாள் மூலவர் | : | ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்து நின்ற பிரான் (கிழக்கு நோக்கிய நின்ற திருக்கோலம்) ஸ்வயம் வ்யக்த க்ஷேத்ரம் என்பர். |
| தாயார் | : | ஆதிநாதவல்லி, குருகூர் வல்லி (இரண்டு தனித்தனி சந்நிதி) |
| விமானம் | : | கோவிந்த விமானம் |
| தீர்த்தம் | : | பிரம்ம தீர்த்தம், தாமிர வருணி. |
| தல விருக்ஷம் | : | புளியமரம். |
| ப்ரத்யக்ஷம் | : | பிரம்மா, நம்மாழ்வார், மதுர கவிகள். |
| ஆகமம் | : | பாஞ்சராத்ரம். |
| மங்களாசாஸனம் | : | நம்மாழ்வார். |

**விசேஷம் :**

"இதுவோ திருநகரி! ஈதோ பொருநை! இதுவோ பரமபதத்து எல்லை!" என்று ஸ்ரீராமாநுஜர் கொண்டாடிய திருப்பதி. இது பஞ்சக்ஷேத்ர திவ்ய தேசம் ஸ்ரீரங்கத்தைப் போல அரையர் சேவை மிக அற்புதமாக இருக்கும். திருமஞ்சனத்தின்போது புருஷசூக்தம் பிரபந்தங்கள் தாளத்துடன் இசைக்கப்படும்.

*"நலம் கொளும் சடகோபனார் நவின்ற*
*ஆரணச் சொல்*
*இலங்க மெய்த் திருவாய் மொழி இனிது*
*உவந்து உரைப்போர்!*

# மார்கழி திங்கள் மகிமை உரைத்தாய்

*திருவில்லிபுத்தூர் தலத்திலுதித்தாய்*
*தீந்தமிழதில் திருப்பாவையளித்தாய்*
*தேனினுமினிய திருமொழியாத்தாய்*
*திருவரங்கனே அனைத்துமென்றாய்!*

*மார்கழி திங்கள் மகிமையுரைத்தாய்*
*மாயோன் புகழை பண்ணிசைத்தாய்*
*மானிடக் காதலுக்கு ஏற்றமளித்தாய்*
*மாதவன் நெஞ்சில் தஞ்சமடைந்தாய்!*

*வைகறை குளியல் புனிதமென்றாய்*
*வையம் உய்ய நோன்பு கண்டாய்*
*வரந்தரு வரதனை நிதம் துதித்தாய்*
*வையம்மகிழ திருவரங்கம் சேர்ந்தாய்!*

*வாசுதேவனை நெஞ்சில் வரித்தாய்*
*வாடா மலர்கள் சூடிக் கொடுத்தாய்*
*வாரணமாயிரம் வந்திடக் கண்டாய்*
*வடபத்ர சயனனை கரம்பிடித்தாய்!*

*கொஞ்சு கிளியை தோழியாக்கினாய்*
*கள்வன் கைப்பிடிக்க தூதனுப்பினாய்*
*கருத்தை கவர் பாசுரங்கள் பாடினாய்*
*குவலயம் போற்றும் கோதையானாய்*

*- திரு ஆண்டாள் திருவடிகளே சரணம்!*



தொகுப்பு :
திரு. தி.சுவாமிநாதன்,
கோவை,
90133 00706

குலங்கள் சூழ் குருகூர்தனில், கொழு முகில் போலப்
பொலிந்து நின்ற எம்பிரான் பதப் பொதுகள் வாழி”
– திவ்யதேச வாழ்த்துப் பாசுரம்.

**த்யானச்லோகம் :**

“யோ ராத்ரௌ தக்ஷிணஸ்யாம் திசி மதுரகவேர் பாஸதே பாஸ்கராப:
தஸ்யாராத்யோ நகர்யாம் ப்ரதித சடரிபோராதி நாதஸ்ததாஸ்ரீ
கோவிந்தாக்யம் விமாநம் விமல ஜலவஹா தாம்ரப்ரணீச தீர்த்தம்
ப்ராசீமுத் வீக்ஷ்யமாணோ வகுள ஸுமரஜஸ் ஸுப்ர ஸந்நஸ்வரூப:
– ஸ்ரீவிஷ்ணு ஸ்தலாதர்சம்

**பாசுரம்**

“ஒடி யோடிப் பலபிறப்பும் பிறந்து மற்றோர் தெய்வம்
பாடியாடிப் பணிந்து பல்படிகால் வழியேறிக் கண்டீர்.
கூடி வானவரேத்த நின்ற திருக்குருகூரதனுள்
ஆடுபுட்கொடியாதி மூர்த்திக்கு அடிமை புகுவதுவே.”
– நம்மாழ்வார் பாசுரம்

“வளம் தழைக்க உண்டால் என்! வாசமணத்தால் என்!
தெளிந்த கலை கற்றால் என்! சீ சீ - குளிர்ந்த பொழில்
தண்குருகூர் வாவிச் சடகோபன் ஊர் எங்கள்
வண்குருகூர் என்னாத வாய்”
– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

491. ஓம் ஆதிதேவ: நம:
(பிரம்மாதிகளுக்கும் முதல்வனே)
ஓம் அபிப்ரியாயை நம:
(மரியாதையுடன் நேசிக்கப்படுபவளே!)

492. ஓம் மஹாதேவ: நம:
(பிரம்மாதிகளைக் கொண்டு விளையாடுபவனே)
ஓம் ஸ்வைர வ்ருத்யை நம:
(சுயேச்சையாக இயங்குபவளே)

493. ஓம் தேவேஸ: நம:
(பிரம்மாதிகளுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுப்பவனே)
ஓம் ருக்மிண்யை நம:
(தங்கம், வெள்ளி ஆபரணங்கள் அணிந்தவளே)

494. ஓம் தேவப்ருத் நம:
(தேவர்களையும் தாங்கி ரக்ஷிப்பவனே)
ஓம் ஸர்வஸாக்ஷிண்யை நம:
(எல்லாச் செயல்களையும், பற்று இன்றி நேரில் பார்த்துக் கொண்டு இருப்பவளே)

495. ஓம் குரு: நம:
(பிரம்மாதிகளுக்கும் வேதங்களை உபதேசித்த குருவே)
ஓம் காந்தாரிண்யை நம:
(பூமியைத் தாங்குபவளே)

496. ஓம் உத்தர: நம:
(பிரம்மாதிகளை ஆபத்திலிருந்து காப்பவனே)
ஓம் பரகத்யை நம:
(உயர்ந்த புகலிடமாக இருப்பவளே)

497. ஓம் கோபதி: நம:
(வேதம், பாஷை, வாக்கு இவை நிர்வகிப்பவனே)
ஓம் தத்வகர்பாயை நம:
(உண்மைப் பொருள் அனைத்தையும் வயிற்றில் கொண்டவளே)

498. ஓம் கோப்தா நம:
(சகல வித்யைகளையும் காப்பவனே)
ஓம் பவா பவாயை நம:
(அடியார்களுக்கு சம்சார க்லேசம் இல்லாதபடி செய்பவளே)

499. ஓம் ஜ்ஞாநகம்ய நம:
(உயரிய ஞானத்தால் அறியப்படுபவனே)
ஓம் அந்தர் வ்ருத்யை நம:
(எல்லாவற்றுக்கும் அந்தர்யாமியாக இருப்பவளே)

500. ஓம் புராதன: நம:
(ஞானத்தை வெளியிடுவதால் ஒவ்வொரு கல்பத்திலும் புராதனனே)
ஓம் மஹாருத்ராயை நம:
(அடியார் படும் துயரம் கண்டு வருந்துபவளே)

ஸ்ரீமதே ஆதிவல்லீ நாயிகா ஸமேத ஸ்ரீஆதிநாத பரப்ரஹ்மணே நம:

குறிப்பு : திருநெல்வேலி – திருச்செந்தூர் ரயில் பாதையில், ஆழ்வார் திருநகரி ரயில்நிலையம் உள்ளது. திருநெல்வேலியிலிருந்து அடிக்கடி பஸ் வசதி உள்ளது. தாமிரவருணியின் தென்கரையில் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் தொடரும்...

# பொங்கலோ பொங்கல்!



*பொங்கலும் வந்தது! பொங்கலும் வந்தது!*
*பொங்கலோ பொங்கல்!*
*மங்கலம் தந்தது! மஞ்சளும் வந்தது!*
*பொங்கலோ பொங்கல்!*
*எங்கனும் கரும்பு! எங்கனும் அரும்பு!*
*பொங்கலோ பொங்கல்!*
*தங்கிடும் மகிழ்ச்சி! பொங்கிடும் மகிழ்ச்சி!*
*பொங்கலோ பொங்கல்!*

*நெல்லுடன் வாழைக் குலைகள் வந்தன!*
*பொங்கலோ பொங்கல்!*
*சொல்லுடன் பொருளும் சேர்ந்தது போலே*
*பொங்கலோ பொங்கல்!*
*வெல்லமும் வந்தது! இனிப்பும் நிறைந்தது!*
*பொங்கலோ பொங்கல்!*
*நல்லதை நினைக்கும் நட்பும் வந்தது*
*பொங்கலோ பொங்கல்!*

*கதிரைப் போற்றிக் கதிரை வணங்கிப்*
*பொங்கலோ பொங்கல்!*
*உதிரம் சொட்ட உழைத்த உழவர்,*
*பொங்கலோ பொங்கல்!*
*வயலில் விளைந்த புதிய அரிசிப்*
*பொங்கலோ பொங்கல்!*
*பெயலால் விளைச்சலால் நிறைந்தது எங்கும்*
*பொங்கலோ பொங்கல்!*

*உழவைப் போற்றி உழைக்கும் மாட்டுப்*
*பொங்கலோ பொங்கல்!*
*பழமாய் வாழைப் பழமாய் இனிக்கும்*
*பொங்கலோ பொங்கல்!*
*மனமாம் வயலில் நல்லதை விதைப்போம்!*
*பொங்கலோ பொங்கல்!*
*இனமாய்க் கூடிக் கன்னியர் வழங்கும்*
*பொங்கலோ பொங்கல்!*

காணும் பெரியோர் வாழ்த்துகள் வழங்கும்
பொங்கலோ பொங்கல்!
வேணும் எல்லா உறவுகள் என்றும்!
பொங்கலோ பொங்கல்!
பேணும் சூழல் நலமாய்க் காணும்
பொங்கலோ பொங்கல்!
கோணுதல் இல்லா ஆட்சிகள் அமையப்
பொங்கலோ பொங்கல்!

வெயிலில் உழைத்து வியர்வை சிந்தும்
பொங்கலோ பொங்கல்!
குயிலின் மொழியார் பெண்கள் வைக்கும்
பொங்கலோ பொங்கல்!
பயிராம் கதிர்கள் களஞ்சியம் நிறைக்கும்!
பொங்கலோ பொங்கல்!
பயிலும் நூல்களின் பண்பைப் போலே
பொங்கலோ பொங்கல்!

ஆண்டின் முதலில் அளவில் இன்பம்!
பொங்கலோ பொங்கல்!
நீண்ட நெடிய நலமே நல்கும்
பொங்கலோ பொங்கல்!
தோண்டத் தோண்டப் பழமை மிக்கப்
பொங்கலோ பொங்கல்!
வேண்டும் வரங்கள் அருளும் இறையே
பொங்கலோ பொங்கல்!

தமிழின் உயர்வாய்த் தமிழன் உயரப்
பொங்கலோ பொங்கல்!
அமிழ்தின் இனிக்கும்! அகமே மலரும்
பொங்கலோ பொங்கல்!
நிமிரும் வாழ்க்கை! நிறையும் வளமே!
பொங்கலோ பொங்கல்!
குமுறும் வேளாண் மக்கள் வெல்வர்!
பொங்கலோ பொங்கல்!



முனைவர் ச. செந்திலாண்டவன், சென்னை, 94445 82856



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## तृतीयः पाठः பாடம்-3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| एषः | = | இவன் | वा | = | ஆ,ஓ | आसीत् | = | இருந்தான் |
| कः | = | எவன் | न | = | இல்லை | आसीः | = | இருந்தாய் |
| सर्वः | = | ஒவ்வொருவரும் | बत | = | ஐயோ | आसं | = | இருந்தேன் |

### வினாக்கள்

१. एषः तदा कुत्र आसीत्?
२. सः तदा अत्र नासीत्।
३. त्वं कुत्र आसीः
४. अहं तत्रासम्
५. कः तत्रासीत्?
६. वयं तत्र न स्मः।
७. ते तत्र न सन्ति।
८. बत सः तत्रास्ति वा
९. एषः तत्र नास्ति वा
१०. सर्वः तत्रास्ति।

1. நீ அப்பொழுது எங்கு இருந்தாய்?
2. நான் அப்பொழுது அங்கு இருந்தேன்.
3. ஐயோ! அவர்கள் அங்கு உள்ளனரா?
4. நான் இங்கு இல்லை.
5. அவன் யார்?
6. நீ யார்?
7. நீ இப்பொழுது எங்கு உள்ளாய்?
8. அவர்கள் இங்கு உள்ளனரா?
9. நீங்கள் இப்பொழுது எங்கு உள்ளீர்?
10. நாங்கள் இங்கு இல்லை?

### விடைகள்

1. இவன் அப்பொழுது எங்கு இருந்தான்?
2. அவன் அப்பொழுது இங்கு இல்லை.
3. நீ எங்கு இருந்தாய்?
4. நான் அங்கு இருந்தேன்.
5. எப்பொழுது அங்கு இருந்தான்?
6. நாங்கள் அங்கு இல்லை.
7. அவர்கள் அங்கு இல்லை.
8. ஐயோ! அவன் அங்கு இருந்தானா?
9. இவன் அங்கு இல்லையா?
10. ஒவ்வொருவரும் அங்கு உள்ளனர்.

१. त्वं तदा कुत्र आसीः?
२. अहं तदा तत्र आसम्
३. बत ते तत्र सन्ति वा?
४. अहं अत्र नासम्
५. सः कः?
६. त्वं कः ?
७. त्वं इदानीं कुत्र असि?
८. ते अत्र सन्ति वा?
९. यूयं इदानीं कुत्र स्थ?
१०. वयं इदानीं अत्र न स्मः

தெலுங்கு மூலம் : மகாமகோபாத்யாய காசி கிருஷ்ணாசாரி
தொகுப்பு : மகாமகோபாத்யாய சமுத்ரால லக்ஷ்மணய்யா



# கந்தர் மலை முருகன்

– திரு. அறந்தாங்கி சங்கர்,
சென்னை, 94441 60161

இந்த உலகத்தில் எத்தனையோ முருகன் திருத்தலங்கள் மக்களுக்காக அருளாசி வழங்கி வருகின்றன. ஆனால் நமக்குத் தெரியாமல் எத்தனையோ அதிசயங்களும் அற்புதங்களும் நிகழ்ந்து கொண்டிருக்கும் முருகன் தலங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அப்படிப்பட்ட முருகனுடைய திருத்தலங்களில் ஒன்று தான் கந்தர் மலை. கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப் பட்டினம் அருகில் சுண்டக்காய் பட்டி என்ற கிராமத்தில் மலை மேல் அமைந்துள்ளது தான் இந்த கந்தர் மலை என்ற முருகன் கோயில்.

இந்த மலையின் மீது சித்தர்கள் வாழ்ந்து வருவதாக ஒரு நம்பிக்கை இருக்கிறது. ஏறத்தாழ 750 அடி உயரத்தில் அமைந்துள்ள இந்த கந்தர் மலை முருகனை தரிசிக்க 250 படிகள் ஏறிச் செல்ல வேண்டும். திருமுருக கிருபானந்த வாரியார், ஜெயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்களும் இந்த கந்தர் மலை முருகனை வந்து தரிசனம் செய்து விட்டு போயிருக்கிறார்களாம்.

சித்தர்கள் இங்கு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதன் அடையாளமாக மேலே உள்ள குகையில் ருத்திராட்ச மணிகள் கிடைத்திருக்கின்றன. வள்ளி குளம் என்று ஒரு குளம் இருக்கிறது. இந்த குளத்தின் மேல் சூரிய ஒளி சந்திர ஒளி படுவதில்லை. இந்த குளத்து நீரை எடுத்து பருகினால் தீரா நோய்கள் தீர்ந்து விடும் என்று இந்த ஊர் மக்கள் சொல்கிறார்கள்.

இதற்கு ஒரு கதை ஒன்று உள்ளது. ஒரு முறை கானகத்தில் முருகனோடு இருந்த வள்ளியம்மைக்கு திடீரென்று விக்கல் ஏற்பட்டுள்ளது. அது கண்ட முருகப் பெருமான் எந்தக் குளத்தில் சூரிய ஒளியும் சந்திர ஒளியும் பட வில்லையோ அந்த குளத்தில் நீர் எடுத்து பருகினால் விக்கல் நின்று விடும் என்று கூற, வள்ளியம்மையும் இந்த கந்தர் மலை குளத்தில் நீர் எடுத்து பருக, விக்கல் நின்று விட்டதாக சொல்லப்படுகிறது.

**திருப்பதி சுற்றுப்பகுதிகளில் உள்ள தி.தி.தே. ஆலய அமைவிடம்**
**திருப்பதி ஆர்.டி.சி. பேருந்து நிலையத்திலிருந்து கி.மீ.களில்**

1) ஸ்ரீபத்மாவதி தாயார் ஆலயம், திருச்சானூர்...05 கி.மீ.
2) ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், ஸ்ரீநிவாச மங்காபுரம்...12 கி.மீ.
3) ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயம், திருப்பதி...01 கி.மீ.
4) ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி ஆலயம், திருப்பதி...2.3 கி.மீ.
5) ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயம், திருப்பதி...03 கி.மீ.
6) ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், அப்பாய குண்டா...18 கி.மீ.
7) ஸ்ரீவேதவல்லி சமேத ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம், நாகுலாபுரம்...65 கி.மீ.
8) ஸ்ரீபத்மாவதி சமேத ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயம், நாராயணவனம்...37 கி.மீ.
9) ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி ஆலயம், கார்வேடி நகரம்...48 கி.மீ.
10) ஸ்ரீகோதண்டராமாலயம், ஒண்டிமிட்டா, கடப்பா மாவட்டம்...116 கி.மீ.

## வைகுண்ட வாயில் திருமலை



பகவான் விஷ்ணுவிற்கு உகந்ததாகக் கருதப்படும் ஏகாதசி விரதம், பூஜை போன்றவை மிகவும் அவசியமானதாகும்.வருடம் முழுவதும் வருகின்ற ஏகாதசிகளில் வைகுண்ட ஏகாதசியே முதன்மையான இடம் பெறுகிறது. மார்கழி மாதம் சுக்ல பக்ஷ ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி என்பர். இது முக்கோட்டி ஏகாதசி என்றும், மோக்ஷ ஏகாதசி என்றும் அனுசரிக்கப் படுகிறது.கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையான் வீற்றிருக்கும் திருமலையிலும் ஒவ்வொரு வருடம் மார்கழி மாதத்தில் வருகின்ற ஏகாதசி, துவாதசி ஆகிய இரு நாட்களில் எம்பெருமானை தரிசித்து வைகுண்ட வாயில் வழியாகச் செல்ல அனுமதித்து வந்தனர். இவ்வருடம் பத்து நாட்கள் வைகுண்ட வாயில் வழியாகச் செல்ல ஏற்பாடு செய்தனர். சுமார் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட மடாதிபதிகளை கலந்தாலோசித்துப் பின்னரே பத்து நாட்கள் தரிசனத்திற்கு அனுமதியளித்தனர். வைகுண்ட ஏகாதசியன்று தங்கத்திருத்தேர் உற்சவமும் நடைபெற்றது. பத்து நாட்களும் திருமலை வைகுண்ட ஏகாதசி முன்னிட்டு திருவிழாக் கோலம் பூண்டது.

வள்ளியின் தாகம் தீர்த்த மலைக்குகையில் அற்புத சித்தர்கள் அமர்ந்து தியானம் செய்தார்கள். வயது முதிர்ந்த அரிய வகை பாம்புகளும் இங்கு அதிகமாக உள்ளது. சித்தர்களும், பாம்புகளும் தற்போதும் அரூபமாக இந்த மலையில் நடமாடிக் கொண்டு தான் இருக்கிறார்கள். இந்த குகைக்குளத்தில் உள்ள தண்ணீரை பக்தர்கள் வீட்டிற்கு எடுத்துச் சென்று தெளித்தால் சகல தோஷங்களும் நீங்கும் என்பதும், கந்தர்மலை வேல் முருகனை வணங்கினால் குழந்தை பாக்கியம் கிடைக்கும், திருமணத் தடை நீங்கும், வியாபாரம் விருத்தியாகும். நோய் நொடிகள் அகலும்.



### கீதையின் பொன் மொழிகள்

தொகுப்பு : டாக்டர் எஸ்.எல்.ஸ்ரீநிவாசன், சத்ய மங்கலம், 97895 97008.

- பகுத்தறிவின்மை, செருக்கு, கோபம், கொடுமை ஆகிய அசுரத் தன்மைகளை ஒழி.
- என் முயற்சியால் மட்டுமே முன்னேறி வாழ்கிறேன் என்ற மதிகேட்டை ஒழித்து, கண்ணன் அருளில்லாமல் எதுவும் நடவாது என்ற உண்மையை உணர்.
- சமைத்து அதிக நேரம் ஆனது. இயற்கைச் சுவை இழந்தது. கண்ணனுக்குப் படைக்கப்படாதது ஆகிய தாமஸ உணவை உண்ணாதே.

தீவினைகள் தூர ஓடும், என்ன வேண்டுதல் வைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்றுவார் "கந்தர்மலை வேல் முருகன்" என்பது பக்தர்களின் நம்பிக்கை. இந்த கந்தர் மலை முருகனை தரிசனம் செய்து வேண்டிக் கொண்டால் நினைத்தது எல்லாம் நிறை வேறும் என்று சொல்கிறார்கள்.

திருமணத்தடை நீங்கவும், குழந்தை வரம் பெறவும், தீராத நோய்கள் தீரவும் இந்த கந்தர் மலை முருகன் அருள்புரிவதாக பக்தர்கள் சொல்கிறார்கள்.

பங்குனி உத்திரம், ஆடி கிருத்திகை, வைகாசி விசாகம் என்று அனைத்து விழாக்களும் இங்கு களை கட்டுகிறது. பங்குனி உத்திர விழாவின்போது நடக்கும் முருகன் வள்ளி, தெய்வானை திருக்கல்யாண விழா மிகவும் பிரசித்தி பெற்றது.

முகூர்த்த நாட்களில் நூற்றுக்கணக்கான திருமணங்கள் கந்தர்மலையில் நடக்கிறது. கந்தர் மலை வேல் முருகனை தரிசிக்க தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மட்டுமின்றி பெங்களூர் பாண்டிச்சேரியில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் வருகின்றனர்.

பக்த கோடிகள் ஒரு முறை முருகப் பெருமானை தரிசனம் செய்து தங்களது துன்பங்கள் இன்னல்கள் நீங்கப் பெற்று வாழ்வில் வளமும் நலமும் பெருகி வாழ அந்த முருகப் பெருமானை பிரார்த்திக்கிறோம்.

தொடர்

ஆயுர் வேதம்

# திரிகடுகம்



பழங்கால இந்திய ஆயுர்வேத மருத்துவ முறையில், பலவிதமான நோய்களை குணம் செய்ய மருந்துகள் பொடியாகவும், கஷாயங்களாகவும், லேஹியங்களாகவும், மாத்திரையாகவும், பஸ்மங்களாகவும், தைலங்களாகவும், பானங்களாகவும், அர்க்கங்களாகவும், ஆசவங்களாகவும், அரிஷ்டங்களாகவும், சூரணங்களாகவும், க்ருதங்களாகவும், கல்கங்களாகவும் கொடுக்கப்பட்டன.

அவைகளில் அதிக அளவில் உபயோகிக்கப்படும் சூரண ஔஷதம் திரிகடுகம். இதனை "திரிகடு சூர்ணம்" என்றும் அழைப்பர்.

திரிகடுகத்தைப் பற்றியும், அவை நீக்கும் நோய்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

சமஸ்கிருதத்தில் த்ரி என்றால் மூன்று. கடு என்றால் காரமான பொருள் என்பதாகும். மூன்று விதமான காரப்பொருட்களைக் கொண்டதால் இது திரிகடுகம் என்ற பெயர் பெற்றது. (சுக்கு, மிளகு, திப்பிலி) சுக்கு – டிரை ஜிஞ்ஜர் – இதன் அறிவியல் பெயர் ஜிம்ஜிபர் அபீஷனாலிஸ், மிளகு – இதன் ஆங்கிலப் பெயர் – பெப்பர், அறிவியல் பெயர் – பைபர் நைக்ரம், திப்பிலி – ஆங்கிலப்பெயர் லாங்க் பெப்பர், இதன் அறிவியல் பெயர் பெப்பர் லாங்கம் என்பதாகும். இவை மூன்றின் கலவையே திரிகடுக சூர்ணம்ஆகும். திரிகடுகப் பொடி ஆயுர் வேதக் கடைகளில் கிடைக்கின்றன.

இம்மருந்து உடலில் சூடு, பித்தம், ஜீரணக் கோளாறுகள், மூக்கு, வாய், மலமூத்திர துவாரத்தில் இருந்து இரத்தம் வடிதல் போன்ற உபாதைகளுக்கு எவ்வித பயமும் இன்றி இம்மருந்தைப் பயன்படுத்தலாம்.

*"மானத்வயா த்த்தா சூர்ணம் ஹீன வீர்யத்வ மாவ்னுயாத்"* (சாரங்கதர ஸம்ஹிதை) என்ற ஆயுர்வேத வாக்கியத்தில் சூர்ணமாக தயாரித்துக் கொண்ட பின்னர் 2 மாதங்கள் வரை அவைகளில் உள்ள சத்துப் பொருட்கள் முழுமையாக இருக்கும். நாட்கள் ஆக ஆக அவற்றின் சக்தி குறைந்து விடும் என்று சொல்லப்படுகிறது. சக்திமிக்க மருத்துவ குணங்கள் கூடிய சூர்ண ஔஷதங்களை 2 மாதத்திற்குள் உபயோகித்து விடுவது மிக நல்லது.

தெலுங்கு மூலம் : டாக்டர். சி.மதுசூதன சர்மா, 90007 61390
தமிழாக்கம் : திருமதி. வி.உஷா, 99850 002156

## ஆன்மீக சிந்தனை

- பக்தனின் இதயமே பகவானின் ஆசனம்.
- யார் கடவுளை நம்பியிருக்கிறனோ அவன் கடவுள் நடத்தியபடியே நடப்பான்.
- பகவானை நம்பியிருக்கும் பொழுது இது நடக்க வில்லையே அது கிடைக்கவில்லையே என்கிற கவலைக்குள் விழாதே.
- தெய்வமே எல்லோருக்கும் குரு.
- இந்த கலியுகத்தில் ராம நாமத்தை விட்டால் வேறு ஆதாரம் கிடையாது.

*- திரு. எம். இராதாகிருஷ்ணன், வாணியம்பாடி*

**அதிகமான உடல் எடை குறைய :**

60 கிராம் திரிகடுகப்பொடி, 60 கிராம் திரிபலாச் சூரணம் பொடி, 20 கிராம் சீரகப்பொடி, 20 கிராம் சித்த ரத்தை, 7.5 கிராம் பெருங்காயம் நெய்யில் வறுத்து கலந்து வைத்துக் கொண்டு காலை மாலை வேளை களில் 1 கிராம் பொடியை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டு, உணவைக் கட்டுப்படுத்தி உடற் பயிற்சி செய்து வந்தால் கொழுப்பு சத்து குறையும். மூட்டுவலிகள் குறையும். உடல் இலேசாக இருக்கும். சர்க்கரை வியாதி உள்ளவர் இந்த மருந்தை 200 மி.லி. மோரில் கலந்து உட்கொள்ள வேண்டும்.

**மழைக்காலங்களில் ஏற்படும் சளி, இருமலுக்கு:**

100 கிராம் வெல்லத்துடன் 50 கிராம் திரிகடுகப் பொடி கலந்து நன்கு இடித்து வைத்துக் கொண்டு, மழைக்கால ஆரம்பத்தில் சில நாட்கள் காலை, மாலை வேளையில் புளியங்கொட்டை அளவு வாயில் போட்டு சாப்பிட்டு ஒரு கப் வெதுவெதுப்பான நீர் குடிக்க வேண்டும்.

**கர்ப்பப்பையில் உள்ள கட்டிகள் மற்றும் நீர் கட்டிகள் நீங்க :**

90 கிராம் திரிகடுகப்பொடி, 10 கிராம் கடுக்காய் பொடி, 10 கிராம் இந்துப்பு (சைந்தவலவணப் பொடி) ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு நாள் தோறும் காலை வெறும் வயிற்றில் 100 மி.லி. காய்ச் சிய பால் அல்லது நீரில் 20–30 கிராம் கற்றாழைச் சாறு கலந்து மிக்சியில் அரைத்து அதில் 1 டீஸ்பூன் மேற் கூறிய கலந்து வைத்துள்ள பொடியை கலந்து உட்கொண்டால் கட்டிகள் கரையும்.

**சைனஸ் பிரச்சனைக்கு :**

5 மி.லி. நீரில் சிட்டிகை அளவு திரிகடுகப் பொடியை கலந்து வடிகட்டி இரண்டுமுறை 3 அல்லது 4 சொட்டுகள் மூக்கில் விட வேண்டும்.

**வயிற்றிற்கு :**

45 கிராம் திரிகடுகப்பொடியில், 15 கிராம் நெல்லிக்காய், 15 கிராம் கந்தகப்பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு காலை மாலை வேளை களில் 1 கிராம் பொடியை தேனுடன் சேர்த்து உட் கொள்ள வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள மருந்து கள் உபயோகிப்பதால் சளி, தலைபாரம் போன்ற உபாதைகள் குறையும்.

**வயிற்றில் கொழுப்பு குறைய :**

திரிகடுகப்பொடி 75 கிராம், 23 கிராம் வறுத்த சீரகப்பொடி , இந்துப்பு 25 கிராம் ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு, 200 மி.லி. மோரில் 2–3 கிராம் பொடியை கலந்து உட்கொண்டால் வயிற்றில் உள்ள தேவையற்ற கொழுப்புச் சத்து குறையும்.

**தோல் வியாதிகள் குறைய :**

75 கிராம் திரிகடுகப்பொடி, 25 கிராம் கடுக்காய் பொடி, 25 கிராம் வெல்லப்பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் இரண்டு முறை அரை டீஸ்பூன் பொடியை தகுந்தளவு நல்லெண்ணெய் உடன் கலந்து குடித்து வந்தால் சொரி, சிரங்கு, சொரியாஸிஸ் போன்ற வியாதிகள், அரிப்பு போன்றவை குறையும்.

**இருமல் குறைய :**

30 கிராம் திரிகடுகப்பொடியில் 10 கிராம் லவங்கப்பொடியை கலந்து காலை மாலை அரை கிராம் முதல் ஒரு கிராம் பொடியை தேனுடன் கலந்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெற வும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த் துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்விற்கு அல்ல.

# தீர விசாரித்து அறிவதே மெய்



– திரு. சத்யதாரா, சென்னை

இராமாயண காவியத்தில் வானர இனத்தின் மன்னனான வாலியும், சுக்ரீவனும் அண்ணன் தம்பி ஆவர். வாலிக்கு ஒரு வரம் உண்டு. எதிரிகள் யாராவது வந்து தாக்கினால், அவர்களது சக்தியில் பாதி அளவு வாலியிடம் வந்து சேர்ந்து விடும். இந்த உண்மை அறியாத துந்துபி, மாயாவி என்ற இரு அரக்கர்கள் வாலியிடம் மோதத் துணிந்தார்கள். முதலில் துந்துபி என்ற அரக்கனை கொன்று, அவனது உடலை சிதைத்து, தனது காலினால் வாலி தூர வீசி எறிந்தான். அருகில் இருந்த ரிஷ்யமுக பர்வதத்தில் தவம் செய்து கொண்டு இருந்த மதங்க முனிவரின் மீது இறந்த உடலின் பாகங்கள் சிதறி வீழ்ந்தன. தவம் கலைந்த முனிவர், “இந்தத் தீச்செயலை செய்தவன் யாராக இருந்தாலும், இந்த ரிஷ்யமுக பர்வதத்தின் எல்லைக்குள் வந்தால், அவனது தலை சுக்குநூறாக வெடித்து இறந்து போவான்” – என்று கடுமையாக ஒரு சாபம் அளித்தார்.

பிறகு மாயாவி என்ற மற்றொரு அரக்கன் வாலியிடம் கடுமையாக மோதினான். வாலி அவனை இழுத்துக் கொண்டு சுக்ரீவனை வெளியில் காவல் வைத்து விட்டு அங்கிருந்த ஒரு குகைக்குள் புகுந்தான். பல நாட்கள் இருவரும் கட்டிப் புரண்டு கடுமையாக போரிட்டனர். நாட்கள் கடந்தபின், குகையில் இருந்து அருவியாக ரத்தம் பெருகி வழிந்தது. அதனை கண்ணுற்ற சுக்ரீவன் முறையான சிந்தனை இன்றி, வாலிதான் இறந்து இருப்பான் என்று நினைத்து, அரக்கன் வெளியே வராமல் இருக்க ஒரு பெரும் பாறையை எடுத்து வந்து, குகையின் வாயிலை மூடினான். அரண்மனைக்கு திரும்பி வந்து, வாலி இறந்து விட்டதாகவும், அரக்கனிடம் இருந்து வானர மக்களை காக்க பாறையால் குகையை மூடியதையும் கூறினான். இந்த நிலையில் மன்னன் இல்லாமல் போன மக்கள், வாலியின் மகன் அங்கதன் சிறுவனாக இருந்தமையால், சுக்ரீவனை அரசனாக இருக்கும்படி கோரிக்கை விடுத்து அவனை மன்னன் ஆக்கினார்கள்.

வாலியோ, மாயாவியை கொன்று விட்டு குகை பாறையால் மூடிய நிலையில் வெளியே வர இயலாமல் தவித்தான். பின்னர் தனது அபார சக்தியினால் பாறையை உடைத்து வெளியே வந்தான். சுக்ரீவன் மன்னனாக இருப்பதை கண்டு சினம் கொண்டான். சுக்ரீவன், தான் தவறு செய்து விட்டதைக் கூறி மன்னிக்க வேண்டினான். சிறிதும் சினம் தணியாத வாலியோ, சுக்ரீவன் மன்னன் ஆவதற்காகவே தன்னை கொன்று விட, பாறையை எடுத்து வந்து குகை வாயிலை மூடி விட்டான் என்றே நினைத்தான். சுக்ரீவனுடைய மனைவியான ரோமாவை கவர்ந்து கொண்டான். சுக்ரீவனை கொன்று விட துடித்தான். வாலியிடம் இருந்து உயிர் தப்பித்துக் கொள்வதற்காக, சுக்ரீவன் மதங்க முனிவர் தவம் செய்து வந்த மலைப் பகுதிக்கு ஓடி மறைந்து வாழ்ந்தான். அப்பகுதிக்கு வாலி வந்தால் அவனது தலை சுக்குநூறாக வெடித்து விடும் என்ற சாபம் சுக்ரீவனுக்கு பாதுகாப்பாக இருந்தது. பின்னர் ஸ்ரீராமபிரானின் நட்பு கிடைக்கப்பெற்று வாலி வதைக்கப்படுகிறான். ரோமா மீட்கப்படுகிறாள். சுக்ரீவன் மன்னன் ஆகிறான்.



ஆராயாமல் கண்ணால் கண்ட குருதி வெள்ளத்தினைக் கண்டு வாலி இறந்ததாக நினைத்ததால் சுக்ரீவன் அண்ணனை இழந்தான்... சுக்ரீவன் பக்குவ மின்றி செய்த தவறை ஆராய்ந்து உணராமல் சினம் கொண்டதால் வாலி தனது உயிரை இழந்தான். இதை உணர்ந்து நாமும் நம் வாழ்வினை சீராகக் கொண்டு செல்வோமாக...

சித்திரக் கதை

# ஸ்ரீஆண்டாள் திருக்கல்யாணம்


கதை மூலம் : திரு. சீனிவாச தீக்ஷிதர்
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்
சித்திரம் : திரு.பி. துளசிபிரசாத்







அடுத்த இதழில் மற்றொரு கதையைப் பார்த்து படித்து மகிழ்வோம்!

முற்றும்.

## வினா விடை

1. பெரியாழ்வார் திருப்பல்லாண்டு பாடிய திவ்யதேசம் எது?

அ) திருமோகூர் ஆ) திருக்குருகூர் இ) திருக்கூடல்

2. இருநூற்றுக்கும் மேற்பட்ட பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திவ்ய தேசம் எது?

அ) திருவரங்கம் ஆ) திருக்கச்சி இ) கோவிலடி

3. கம்பராமாயணம் அரங்கேற்றம் செய்யப்பட்ட திவ்ய தேசம் எது?

அ) திருக்கூடல் ஆ) திருவரங்கம் இ) திருப்பாடகம்

4. நில உலகில் பார்க்க முடியாத திவ்ய தேசம் எது?

அ) திருக்கடிகை ஆ) திருக்கூடம் இ) திருப்பாற்கடல்

5. எந்த திவ்ய தேசத்தில் பெருமாள் வீரசயனத்தில் சேவை சாதிக்கிறார்?

அ) திருவல்லிக்கேணி ஆ) திருநாங்கூர் இ) திருஇந்தளூர்

6) மதுரவேணி நாச்சியார் என்னும் திருநாமத்துடன் தாயார் சேவை சாதிக்கும் திவ்ய தேசம் எது?

அ) திருஆதனூர் ஆ) நாச்சியார் கோயில் இ) திருமுழிக்களம்

7) ஐப்பசி மாதத்தில் திருஅவதாரம் செய்த ஆழ்வார் யார்?

அ) பொய்கையாழ்வார் ஆ) குலசேகராழ்வார் இ) நம்மாழ்வார்


தொகுப்பு : திரு. என். பாலசுப்பிரமணியன், திருவள்ளூர்

**விடைகள்**

1) இ, 2) அ, 3) அ, 4) இ, 5) இ, 6) இ, 7) அ

## சித்திரம் வரைதல்

இந்த சித்திரத்திற்கு வண்ணம் தீட்டுவோமா...



அருகில் உள்ள படத்தை இந்த கட்டத்தில் வரையுங்கள்...

Edited and Published on behalf of T.T.Devasthanams by **Prof. K.Rajagopalan**, Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by **Sri. P. Ramaraju,** M.A., Special Officer (Press & Publications), T.T.D. Press, Tirupati - 517 507.



திருமலையில் ஸ்ரீஸ்ரீஸ்ரீ பெரிய ஜீயர் ஸ்வாமிகள் முன்னிலையில் "மார்கழி மாத திருப்பாவை" நிகழ்ச்சியில் பங்கு கொண்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ சிறிய ஜீயர் ஸ்வாமிகள் மற்றும் கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள். திருப்பாவை தொடர் சொற்பொழிவாற்றும் ஏ.டி.பி.பி. சிறப்பு அதிகாரி திரு. கே.ராஜகோபாலன் அவர்கள்



திருப்பதியில் அன்னமய்யா கலாமந்திரத்தில் 15-12-2020 அன்று "திருப்பாவை தொடர் சொற்பொழிவு" நிகழ்ச்சியினை துவக்கி வைக்கும் திருப்பதி இணைச் செயலாட்சித் தலைவர் (சுகாதாரம் மற்றும் கல்வி) திருமதி சதா பார்கவி ஐ.ஏ.எஸ். அவர்கள் மற்றும் தி.தி.தே. உயர் அதிகாரிகள்



27-12-2020 அன்று திருமலைக்கு வருகை புரிந்த ஆ.மா. உயர்நீதிமன்ற பிரதான நீதிபதி நீதி அரசர் திரு. ஜே.கே. மஹேஸ்வரி அவர்களுக்கு தி.தி.தே. கூடுதல் செயலாட்சித்தலைவர் திரு. ஏ.வி. தர்மாரெட்டி அவர்கள் தி.தி.தே. காலண்டர் மற்றும் டைரி வழங்கும் காட்சி



24-12-2020 அன்று திருமலைக்கு வருகை புரிந்த இந்திய உச்சநீதிமன்ற பிரதான நீதிபதி நீதி அரசர் திரு. அரவிந்த் பாப்டே அவர்களுக்கு தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், தி.தி.தே. செயலாட்சித்தலைவர் டாக். கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ். அவர்கள் ஸ்வாமி சித்திரப்படத்தை வழங்கும் காட்சி




புதுதில்லி, ஸ்ரீவேங்கடேஸ்வரா கல்லூரியில் நிர்மாணிக்கப்பட்ட புதிய கட்டிடங்களை 29-12-2020 அன்று திறந்து வைத்த நிகழ்ச்சியில் தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், செயலாட்சித்தலைவர் டாக்டர் கே.எஸ். ஜவஹர் ரெட்டி ஐ.ஏ.எஸ் அவர்கள், நிதி ஆலோசகர் மற்றும் பிரதான கணக்காளர் திரு.ஓ. பாலாஜி அவர்கள், பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர்கள் திருமதி வேமி ரெட்டி பிரசாந்தி அவர்கள், டாக்டர் முப்பவரபு நிச்சிதா அவர்கள், திரு. டி.பி.அனந்த அவர்கள் மற்றும் திரு. ராகேஷ் சின்ஹா அவர்கள் பங்கு கொண்ட போது



“வாத்ஸல்யாதி குணோஜ்ஜ்வலாம் பகவதீம் வந்தே ஜகன்மாதரம்”